# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஏப்பிரல் 12 2019. இதழ் - 59








நமது மலையகத்துக்கு ஜனாதிபதி விருது ஒடுக்கப்பட்டவர்களின் குரலுக்குகிடைத்த மரியாதை, அங்கீகாரம்

பக்கம் - 12



அரச அதிகாரிகளே நீங்கள் நல்லவர்களா? கெட்டவர்களா?

பக்கம் - 03



இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

பக்கம் -05



மருத்துவர் மீது குற்றஞ்சாட்ட முன்பாக கருத்தில் கொள்ள வேண்டியவை

பக்கம் - 07

# ஜனாதிபதி மட்டக்களப்பு வருகிறார்

## பல திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிப்பு



நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்ற ஜனாதிபதியின் செயற்திட்டத்தினை முன்னிட்டு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெள்ளியன்று மட்டக்களப்புக்கு வருகிறார்.

இவரது வருகையை முன்னிட்டு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் கூட்டமும் வேறு பல நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 10 மணிக்கு வெபர் மைதானத்தில் கூட்டத்தில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி அவர்கள், ஸ்மார்ட் சிறிலங்கா என்ற பெயரில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு அலுவலகம் ஒன்றை ஆரம்பித்து வைப்பதுடன், அங்கு ஒரு கண்காட்சியையும் திறந்து வைப்பார்.

அதேவேளை, ஜனாதிபதியின் இந்த நாட்டுக்காக ஒன்றிணைவோம் திட்டத்தின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி செயலகம், மாகாண சபைகள், அதிகார சபைகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றின் நிதிக்கொடுப்பனவின் கீழேயே இந்த செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் ஒட்டு மொத்தமாக 200.5 மில்லியன் செலவில் 1115 வேலைத்திட்டங்கள் 14 பிரதேச பிரிவுகளிலும் 161 கிராம சேவகர் பிரிவுகளிலும் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைமுறைப்படுகின்றன. அதனடிப்படையில் முதல் மூன்று நாட்களுக்கும் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் அடிப்படையில் 7.2 மில்லியன் ரூபா செலவுசெய்யப்பட்டு, 845 திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. 20 904 குடும்பங்கள் இதனால் நன்மையடைந்துள்ளன என அரச அறிவித்துள்ளது.

அதிகபட்சமாக மண்முனை தெற்கு மற்றும் எருவில் பற்று பிரதேச செயலக பிரிவுகளில் 120 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 4.5 மில்லியன் ரூபாய் செலவுசெய்யப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில், விசேடமாக

தொடர்ச்சி... (பக்கம் -02 )



# உரியவர்களின் கவனத்துக்கு ஒரு கோரிக்கை!

-- சீவகன் பூபாலரட்ணம் --

மேலே உள்ள புகைப்படம் கடந்த புதன்கிழமை "நாட்டுக்காக ஒன்றிணைவோம் திட்டத்தின் கீழ் கால்பந்து அணிகளுக்காக வழங்கப்பட்ட சிறப்புப் பயிற்சிக்காக பன்சேனை பாரி வித்தியாலய மகளிர் கால்பந்து வீராங்கனைகள் வந்த போது பிடிக்கப்பட்ட படம்.

இவர்கள் தேசிய மட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பெருமை சேர்த்துத்தரும் ஒரு அணியினர். ஆனால், இப்படியான வாகனத்தில் வந்து பயிற்சியை பெற்றுச் செல்ல வேண்டிய நிலையில் இவர்கள் இருக்கிறார்கள்.

முதலாவது கேள்வி, நகரப் பகுதிகளில் இருக்கும் பாடசாலைகளில் கற்கும் மாணவிகளை இப்படி பயணம் செய்ய அவர்களது பெற்றோரோ அல்லது ஆசிரியர்களோ அனுமதிப்பார்களா?

இப்படியான ஒரு அபாயகரமான பயணத்தை இவர்கள் மேற்கொள்வதன் பின்னணியில் இவர்களது ஊக்கம் முக்கிய காரணமாக இருந்தாலும், இந்தப் பயணம் இவ்வளவு ஆபத்தானதாக இருப்பதை தடுக்க மாவட்ட மட்டத்தில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொண்டாக வேண்டியுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -02 )




## ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக நீதிமன்றம் செல்ல பிரதான கட்சிகள் முயற்சி தேர்தலை பிற்போடவுள்ளதாகக் குற்றச்சாட்டு

(நி.அமிர்தஸன்)

வடக்கு கிழக்கு மாகாண சபைகள் உள்ளிட்ட ஒன்பது மாகாண சபைகளின் தேர்தல்கள் இந்த ஆண்டுக்குள் நடைபெறுவதற்குரிய வாய்ப்புகள் இல்லையென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார். இந்த நிலையில். ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு யூன் மாதம் வரை பிற்போட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளன.

2016 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்ட 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகலாக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மேலும் ஒரு ஆண்டுகாலத்திற்கு தனது பதவிக்காலத்தை நீடிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்தை நாட வேண்டிய அவசியம் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன தனது பதவிக்காலத்தை மேலும் நீடிக்க முடியாதென்றும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஒன்பதாம் திகதி புதிய ஜனாதிபதி பதவியேற்க வேண்டுமெனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் புதிய நீதியரசர் பதவியேற்ற பின்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் குறித்து மைத்திரிபால சிறிசேன சட்டவியாக்கியானம் கோரவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியிருந்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறு முடிவு எடுத்தால் அவருடைய பதவி நீடிப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

இதேவேளை, ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தலே நடைபெறுமென தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் கூறியுள்ளன. மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதற்கான காலம் தாமதித்து விட்டதாகவும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமெனவும், ஆனால் அது தற்போதைக்கு சாத்தியப்படக் கூடியதல்ல என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் கூறுகின்றன.

தொடர்ச்சி...

## ஜனாதிபதி மட்டக்களப்பு வருகிறார்

ஓய்வூதியக்காரர்களுக்கான பிரச்சனைகள், சிறுவர் மற்றும் முதியோர் சம்பந்தமான பல பிரச்சனைகளுக்கு தீர்வுகள் வழங்கப்பட்டன. அது மட்டுமல்லாது வாகன சாரதி அனுமதிப்பத்திரங்கள் அது தொடர்பான வேலைகள் மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வுகள் கடவுச்சீட்டு பெற்றுக்கொடுப்பதற்கான துரித சேவைகள் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாவர்களுக்கான விசேட வேலைத்திட்டமாக பாடசாலையை கைவிட்ட மாணவர்களின் கல்வியினை மீண்டும் தொடர்வதற்கு சேர் ஜோன் கொத்தலாவல இராணுவ பல்கலைக்கழகத்தில் பலவிதமான கல்வித்திட்டங்களில் இணைக்கும் வகையிலான செயற்திட்டம், விவசாய அமைச்சுடனான விதை உள்ளீடுகள், உரச்செயலகத்தின் பணிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மது மற்றும் போதைப்பொருளுக்கு எதிரான வேலைத்திட்டங்கள், டெங்கு வேலைத்திட்டம், பொலிசாரின் சிரமதான நிகழ்ச்சி நிரல்கள் என சமூக நலன் கருதிய பல நிகழ்ச்சித் திட்டங்களும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## உமா ஓயா மின்னுற்பத்தி ஆரம்பிக்கும்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் உமா ஓயா மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

இந்த மின்னுற்பத்தி நிலையத்தின் மூலம் 120 மெகாவொட் மின்வலுவை உற்பத்தி செய்ய முடியும். எதிர்காலத்தில் மேலும் பல மின்னுற்பத்தித் திட்டங்கள் அமுலாக உள்ளன. இதன் மூலம் மின்சார நெருக்கடிக்குத் தீர்வு காணப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

உமா ஓயா மின்வலு உற்பத்தி நிலையம் பிரத்தியேகமானது. இது நிலத்தின் கீழ் அமைந்துள்ள மின்னுற்பத்தி நிலையமாகும். உலகில் இது போன்ற மின்னுற்பத்தி நிலையங்கள் மிகவும் குறைவு. உமா ஓயா திட்டத்தின் மூலம் இரு போகங்களிலும் 6 ஆயிரம் ஹெக்டயர் காணியில் நெற்செய்கை மெற்கொள்ளலாம் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் மான்னப்பெரும மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி...

## உரியவர்களின் கவனத்துக்கு ஒரு கோரிக்கை!



பன்சேனை மட்டக்களப்பு நகரில் இருந்து சுமார் 35 கிலோமீட்டர்கள் தூரத்தில் இருக்கும் ஒரு ஊர். விளைச்சல்காலங்களில் யானைகளின் தாக்கங்களை எதிர்கொள்ளும் கிராமம். ஆனால், இந்த ஊருக்கான பயணத்தில் காஞ்சிரங்குடாவில் இருந்து சுமார் 7 கிலோமீட்டர்களுக்கு சரியான வீதி கிடையாது. கரடுமுரடான, மிகவும் ஆபத்தான பாதையில் பயணம் செய்துதான் இவர்கள் ஊர் போய்ச் சேரவேண்டும்.

அதுமாத்திரமன்றி அந்தப் பகுதிக்கு தனியார் பஸ் போக்குவரத்து மாத்திரமே உண்டு. அரச போக்குவரத்து வாகன சேவை கிடையாது.

தனியார் பஸ் கூட காலை 8 மணிக்கு புறப்பட்டுத்தான் அங்கிருந்து வரும். ஆகவே காலை 8.30 மணிக்கு நகரிலோ அல்லது கொக்கட்டிச்சோலையை அண்மித்த இடங்களிலோ நடக்கக்கூடிய எந்த நிகழ்விலும் கலந்துகொள்வதாயின், இந்த மாணவிகளுக்கு இப்படியான போக்குவரத்துச் சாதனங்களை நாடுவதை விட வேறு வசதி கிடையாது. இந்த ஊர் இப்படியான சூழலில்தான் போர் முடிந்த கடந்து 10க்கும் அதிகமான வருடகங்களாக இருந்து வருகிறது என்பது எவருக்கும் தெரியாது என்றெல்லாம் கூறமுடியாது.
இதில் இன்னுமொரு முக்கிய விடயம் இந்த பள்ளிக்கூடம் மட்டக்களப்பின் பெருமையை, கிழக்கு மாகாணத்தின் பெருமையை கடந்த சில வருடங்களாக தேசிய மட்டத்தில் நிலைநாட்ட முயற்சிக்கும் சிறுமிகள் கற்கும் பாடசாலை. இவர்களுக்கான போக்குவரத்தின்மை இவர்கள் எதிர்நோக்கும் முதலாவது சவால். அது அவர்களுக்கு பாதுகாப்பு சார்ந்த பிரச்சினையாகவும் உள்ளது. இந்தத்தடையைக் கடந்து வராவிட்டால் இவர்களால் எப்படி தேசிய மட்டத்தில் மற்றவர்களோடு நிகராக போட்டி போடமுடியும்?

படுவான்கரையின் பல இடங்களுக்கு போக்குவரத்து சரியில்லை என்பது எமக்கும் தெரியும். அங்கும் அந்த வகையிலான வசதிகள் தேவைதான். ஆனால், தேசிய மட்டத்தில் சாதிக்கத்துடிக்கும் பெண்களுக்கு, மட்டக்களப்புக்கு பெருமை தேடித்தர முயலும் ஒரு பிந்தங்கிய கிராமப் பிள்ளைகளுக்கான ஆபத்தான போக்குவரத்தை தவிர்க்க நாம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம்?

ஜனாதிபதி மட்டக்களப்புக்கு வருகை தரும் நேரம் இது. அதனை முன்னிட்டு, நூற்றுக்கணக்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றோடு இல்லாவிட்டாலும், ஜனாதிபதியின் வருகையின் போது அதிகாரிகள் அல்லது பொதுமக்கள் இந்த விடயத்தை அவர் முன் வைத்து இந்தப் பன்சேனைக்கான போக்குவரத்துப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணமுன்வரவேண்டும்.

'மட்டக்களப்புக்கு விரைவில் இத்தனை கோடியில் வீதித்திட்டம் வருகின்றது. அப்போது பன்சேனைக்கும் வரும்' என்ற சாக்குப் போக்கெல்லாம் எமக்குத் தேவையில்லை. இந்த சிறுமிகளின் பயணப் பாதுகாப்புக்குத்தான் முன்னுரிமை அவசியம்.

துணிச்சலும் அக்கறையும் உள்ளவர்கள் ஜனாதிபதியிடம் இந்த விடயத்தை கொண்டு சொல்லுங்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் யாரும் இதனை செய்யலாம். இல்லாவிட்டால் நாம் செய்வோம்.

அன்புடன்
சீவகன் பூபாலரட்ணம்

## போதையில் வருபவர் மீது சோதனை



மதுபோதையில் வாகனங்களை செலுத்துபவர்களை கைது செய்வதற்காக இன்று முதல் எதிர்வரும் 20ம் திகதி வரை விசேட சோதனை நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொள்ளவுள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர இது தொடர்பாக தெரிவிக்கையில், பண்டிகைக் காலத்தில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் போக்குவரத்து நெரிசலை சீர் செய்வதற்கும் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவும் இரண்டாயிரத்து 400 பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவார்கள் என்றும் கூறினா

# அரச அதிகாரிகளே நீங்கள் நல்லவர்களா? கெட்டவர்களா?

"நாட்டுக்காக ஒன்றிணைவோம்" வேலைத்திட்டத்துக்காக ஜனாதிபதி மைத்திரி அவர்கள் மட்டக்களப்புக்கு விஜயம் செய்கிறார்.

**சீவகன் பூபாலரட்ணம்**

அதனை முன்னிட்டு பல நூற்றுக்கணக்கான அபிவிருத்தித் திட்டங்களை அரச நிறுவனங்கள் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் மேற்கொள்கின்றன. இந்தத் திட்டங்களால் மக்களுக்கு பெரும் நன்மைகள் கிடைத்துள்ளதாகவும் அரச நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இது மகிழ்ச்சிக்குரியது. அரச நிறுவனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் எமது பாராட்டுக்கள்.

ஆனால், இந்தத்திட்டங்களுக்காக கிட்டத்தட்ட கடந்த ஒரு வாரமாக அரசாங்க பணியாளர்களும் அதிகாரிகளும் பம்பரம்போல மாவட்டம் முழுவதும் சுழன்று திரிவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

முழுநீளச் சட்டையை இழுத்து மடித்துக்கொண்டு அதிகாரிகள் சித்திரை வெயிலில் ஓடி ஓடி உழைத்தார்கள். வியர்த்து விறுவிறுத்து அவர்கள் நின்றதை பல இடங்களில் பார்த்தோம்.

ஆர்ப்பாட்டத்துக்கு பாதுகாப்புக் கொடுக்கும் அல்லது அதனைக் கட்டுப்படுத்த விளையும் பொலிஸார், ஊர்வலம் ஒன்றில் போதைப்பொருள் ஒழிப்பு பிரச்சார பிரசுரங்களை கொடுத்து வந்தது ஆச்சரியமாக இருந்தது.

எழுவான்கரை, படுவான்கரை என எல்லா இடங்களிலும் அரசாங்க அதிகாரிகள் நீக்கமற நிறைந்திருந்தார்கள். அவர்கள் வியர்க்க விறுவிறுக்க ஓடியாடி, மூச்சிரைக்க வேலை செய்ததைப் பார்க்க ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும் மறுபுறம் அவர்களைப் பார்க்க மிகவும் பரிதாபமாகவும் இருந்தது.

இரட்டிப்பு வேகத்தில், இரட்டிப்பு மடங்கு வேலைகளை, இரட்டிப்புச் சக்தியைப் பயன்படுத்தி, ஓடி ஓடி உழைத்தார்கள்.

அரசாங்க அதிகாரிகள் இவ்வளவு நல்லவர்களா என்று நினைக்கத் தோன்றியது. அதேவேளை, இப்படி இவர்கள் ஒவ்வொரு நாளும் உழைத்திருந்தால் எங்கள் மட்டக்களப்பு ஒரு பொன்பூமியாக மாறியிருக்குமே என்றும் எண்ணத்தோன்றியது. அரச அதிகாரிகளே உண்மையில் நீங்கள் யார் நல்லவர்களா அல்லது கெட்டவர்களா?

**ஜனாதிபதி மைத்திரி அவர்களே மீண்டும் மீண்டும் வருக!**

இவ்வளவு அதிகமாக வேலை செய்து குறுகிய காலத்தில் இவ்வளவு (நீங்கள் அறிவித்ததன்படி) சாதிக்கும் திறமை உங்களிடம் இருந்திருக்கிறதே என்பது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

அதேவேளை, இப்படி உழைக்கக்கூடிய நீங்கள் இவ்வளவு நாளும் இப்படி உழைக்காமல் இருந்து நேரத்தை வீணடித்திருக்கிறீர்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இவ்வளவு நாளும் உழைக்காமல் இருந்ததால்தான் இப்போது இரட்டிப்பாக உழைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டீர்களோ என்றும் எண்ணத்தோன்றுகிறது.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்ட திட்டங்களுக்காக ஒரு வாரத்தில் இவ்வளவு உழைக்க முடியும் என்றால் ஏன் இவ்வளவுநாளும் அதனைத்



தினமும் செய்யவில்லை? ஏன் இந்த அழுத்தம் உங்கள்மீது? செயற்திறன் இல்லாமல் இருப்பது குறைதான். ஆனால், செயற்திறனுக்கான வல்லமை இருந்தும் அதனைப் பயன்படுத்தாமல் இருப்பது பெரும் தவறில்லையா?

பலர் இரட்டிப்பு வேலை செய்ததுடன், பல சந்தர்ப்பங்களில் ஒரே வேலையை இரு தரப்பு ஒரே நேரத்தில் இரட்டிப்பாகச் செய்ததாகவும் சிலர் குறைப்படுகிறீர்கள். என்றும் இல்லாமல் திடீரெனச் செய்யப்போனதால் இந்த தடுமாற்றமா?

எல்லாரையும் நான் குறைகூறவில்லை. உண்மையாகவே கடமையை தலைமேல் கருதி உழைக்கும் அதிகாரிகளை நான் நேரடியாகவும் அறிவேன். இது எவரையும் தனிப்பட்ட வகையில் தாக்கும் ஒரு ஒரு பத்தி அல்ல. இது அனைவருக்குமானது.

எங்களை எங்கள் வேலைக்கு மேலாக செய்ய அழுத்தம் கொடுத்துவிட்டார்கள் என்றெல்லாம் நீங்கள் சாக்குப் போக்குச் சொல்ல முடியாது. ஏனெனில் நீங்கள் கொடுக்கப்பட்ட வேலைகளை குறுகிய காலத்தில் செய்து முடித்திருக்கிறீர்கள். ஜனாதிபதி வருகைக்காக மாத்திரம் ஏன் இப்படி உழைக்கிறீர்கள் என்பதுதான் எங்கள் கேள்வி. உங்களை, அளவுக்கு அதிகமாக வேலை வாங்கியிருந்தால், அதனால் உங்கள் உரிமை மீறப்பட்டிருந்தால், உங்களுக்கு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன, மேம்பாட்டுக்கான அமைப்புக்கள்(பொலிஸாருக்கு இல்லாமல் இருக்கலாம்) இருக்கின்றன. ஏன் நீங்கள் அவற்றைக் கொண்டு உங்கள் ஆட்சேபனையை இதுவரை தெரிவிக்கவில்லை.

நீங்கள் அப்படி எதுவும் செய்ததாகத் தெரியவில்லையே. ஆகவே நீங்கள் உரிய அளவுக்குத்தான் இந்தக் காலகட்டத்தில் வேலை செய்திருக்கிறீர்கள் என்று நாங்கள் எண்ணத் தோன்றுகிறது. ஆகவே ஏனைய காலங்களிலும் ஏன் நீங்கள் இப்படி உழைக்கவில்லை என்ற கேள்வியும் கூடவே எழுகிறது.

நீங்கள் அப்பாவியா அல்லது உழைக்காமல் காலம் கடத்துகிறீர்களா? அல்லது உங்கள் மேலிடத்துக்கு பயந்துபோய் இருக்கிறீர்களா என்று விடை தெரியாமல் மகா பொதுசனங்கள் மலைத்து விழி பிதுங்கி நிற்கிறார்கள். உண்மையில் நீங்கள் யார். ஜனாதிபதி வந்தால் மாத்திரந்தான் வேலை செய்வீர்களா?

அப்படியானால் ஜனாதிபதியை மாதம் ஒரு தடவை மட்டக்களப்பு வருமாறு நாங்கள் அழைக்க வேண்டுமோ?

எது எப்படி இருந்தாலும் அதிஸ்டவசமாக புதுவருடம் கூடவே வருகின்றது. அந்தநாட்களில் விடுமுறை எடுத்து, உடற்களைப்பு நீங்கி, மக்கள் பணிக்கு புதிய உத்வேகத்துடன் திரும்பி வாருங்கள்.

எங்கள் மீது உங்களுக்கு கோபம் வருவது புரிகிறது. மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாக நீங்கள் உணர்வதும் புரிகிறது. என்ன செய்வது உங்களை நாம்தான் விமர்சிக்க வேண்டும். இது பாதகமான விமர்சனம் அல்ல. சாதகமான தட்டிக்கொடுப்புத்தான்.

உங்களுக்கு எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

# சர்வசன வாக்குரிமையும் வாக்காளர்களும்

**எழுவான் வேலன்**

டொனமூர் ஆணைக்குழுவினர் 1931ம் ஆண்டு சர்வசன வாக்குரிமையினை வழங்க முற்பட்ட போது சேர்.பொன்.இராமநாதன் போன்ற தலைவர்கள் வாக்குரிமையானது கல்விகற்றவர்களுக்கும் சொத்துள்ள வர்களுக்கும் உயர்சாதிக் காரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் அவர்கள்தான் அந்த வாக்குரிமையினை பொறுப்புள்ளவகையில் பயன்படுத்து வார்கள் என்று வாதாடினர். இவ்வாதம் உயர்வர்க்க நலனை கட்டிக்காக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சி என்பதில் சந்தேகமில்லை. இருந்தபோதிலும் அவருடைய வர்க்கநிலையில் இருந்து பார்க்கின்றபோது, இப்போ அவர்கள் இருந்திருப்பார்களானால் தாம் எவ்வளவு தவறான வாதத்தை முன்வைத்திருக்கின்றோம் என்பதைப் பார்த்து வெட்கப்படுவார்கள் என நினைக்கின்றேன். ஏனெனில் இன்று இலங்கையின் எழுத்தறிவு வீதம் 92.6 வீதமாகும். இவர்கள்தான் இலங்கையின் அரசியலைத் தீர்மானிக்கின்ற சக்தியாக உள்ளனர். இவ்வளவு பேரும் தங்களது வாக்குரிமையினை பொறுப்புள்ளவிதத்தில் பயன்படுத்துகிறார்களா என்பதுதான் இன்று எமக்குள்ள கேள்வியாகும்.

இன்று மேற்படி வாக்காளர்கள் பின்வரும் ஏதோ ஒன்றைச் சார்ந்துதான் வாக்களிக்கின்றனர்.

1. இன உணர்வின் அடிப்படையில் தமது இனத்துக்காக வாக்களித்தல் - சிங்களவர்கள் சிங்களக் கட்சிகளுக்கும், தமிழர்கள் தமிழ் கட்சிகளுக்கும், முஸ்லிம்கள் முஸ்லிம் கட்சிகளுக்கும் வாக்களிப்பதைக் காணலாம்.

**சாவீட்டு அரசியல்வாதிகளைக் கடந்தும் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.**

2. மத உணர்வின் அடிப்படையில் தமது மதக்காரர்களுக்கு வாக்களித்தல் - சிங்களக் கட்சியிலோ அல்லது தமிழ் கட்சியிலோ இருக்கும் தங்கள் மதத்துக்காரனுக்கோ அல்லது தங்கள் மதத்தை பாதுகாப்பார்கள் என நம்பப்படுபவர்களுக்கோ வாக்களித்தல்.

3. பிரதேச உணர்வின் அடிப்படையில் தமது பிரதேசக்காரர்களுக்கு வாக்களித்தல் - தொகுதிக்காரன், ஊரவன் என்று வாக்களித்தல் உதாரணத்திற்கு தமிழ்த் தேசியத்தை உயிர் மூச்சாக கொண்டு வாழும் எக்ஸ் எனும் மட்டக்களப்பு வேட்பாளர் யாழ்ப்பாணத்திலோ அல்லது வேறுமாவட்டத்திலோ வெற்றி பெறமுடியாது. இது போன்றே யாழ்ப்பாண வேட்பாளரும் மட்டக்களப்பில் வெற்றி பெறமுடியாது.

4. சாதியுணர்வின் அடிப்படையில் வாக்களித்தல் - அந்தந்த சாதிக்காரனுக்கு அந்தந்த சாதிகளே வாக்களித்தல்.

மேற்படி நான்கிலிருந்தும் பின்வரும் முடிவினைப் பெறலாம், அதாவது இனத்தவர்களாகவும் மதத்தவர்களாகவும் ஊரவர்களாகவும் சாதிக்காரர்களுமாக இருப்பார்களாக இருந்தால் அவர்கள் சொந்தக்காரர்களாகின்றனர். எனவே கொள்கை, கோட்பாடு, நல்லவர், நேர்மையானவர், ஒழுக்கமுடையவர் என்பதற்கு அப்பால் இந்தப் படித்தவர்கள் தங்களுடைய சொந்தக்காரர்களுக்கே வாக்களிக்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

இந்த நான்கு வகையினையும் விட இப்போ ஐந்தாவதாக ஒரு வகையினர் உருவாகி வாக்குகளைப் பெறுகின்றனர். இவர்களை சாவீட்டு அரசியல்வாதிகள் எனக் கூறலாம். இவர்கள் எங்கெல்லாம் சாவீடு பற்றிக் கேள்விப்பட்டாலும் காலமானவர் தெரிந்தவரா அல்லது தெரியாதவரா என்ற எந்தப் பேதமுமின்றி எந்த மனச்சஞ்சலமுமின்றி மிகப் பெரிய மனிதாபிமானச் சிகரமாக தம்மைக் காட்டிக்கொண்டு அந்தச் சாவீட்டுக்குப் போய் அஞ்சலி செலுத்தி மரணமடைந்தவர்களின் உறவினர்களுடன் துக்கத்தைப் பகிர்ந்து கொள்வார்கள். இதனை சாவீட்டு அரசியல் எனலாம். தப்பித்தவறி அஞ்சலி உரைக்காக இவர்களிடம் மைக்கைக் கொடுத்தால் மீளப்பெறுவதற்கு கொடுத்தவர் தவம் இருக்கவேண்டி வரும் என்பதுடன் கேட்போர்கள் அஞ்சலி உரையை அல்லாது அங்கு ஒரு உப்புச்சப்பில்லாத உரையொன்றையே கேட்கவேண்டி வரும் என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அம்பாறையில் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஒரு வேட்பாளர் பற்றிய கதையில் அவர் இறப்பு நிகழ்ந்ததும் உடனே போய் அஞ்சலிப் பதாகை கட்டி, அடுத்த நாள் இடியப்பம் கொஞ்சம் வாங்கிக்கொண்டு கொடுத்து வருவாராம். இதுதான் அவருடைய தகுதிப்பாடாகும். இந்த சாவீட்டு அரசியல் மட்டக்களப்பிலும் உண்டு. இதனைப் பயன்படுத்தி பாராளுமன்றம் சென்றவர்களும் உண்டு. இனிமேலும் பாராளுமன்றம், மாகாணசபை எனச் செல்வதற்கு இந்த சாவீட்டு அரசியலைப் பயன்படுத்துகின்ற பல புதியமுகங்களையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# சொல்லத் துணிந்தேன்! 03



தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

அண்மையில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் வடமாகாணத்தின் முன்னாள் முதல்வருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் தற்போதைய தலைமைப்பீட பிரதிநிதிகள் சிலர் சந்தித்து, எதிர்காலத்தில் தமிழ் மக்கள் கூட்டணியுடன் தேர்தல் கூட்டு வைப்பது குறித்து கலந்துரையாடியதாக செய்திகள் கசிந்துள்ளன. இது உண்மையா? பொய்யா? என்பதற்கு அப்பால், இன்று தென்னிலங்கையிலும் கிழக்கிலும் நிலவும் அரசியல்



களநிலையில், இச்சந்திப்பு ஓர் அரசியல் முதிர்ச்சியின்மையைக் காண்பிக்கிறது. இச்சந்திப்பு தென்னிலங்கை, பிராந்திய மற்றும் பூகோள அரசியல் அவதானிகளுக்கு ஒரு தவறான அரசியல் சமிக்ஜையை வழங்குமே ஒழிய கிழக்குத் தமிழருக்கு எந்த நல்ல அரசியல் அறுவடையையும் தராது.

1987ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பெற்றிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள் 2007இல் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பெற்று இரண்டிற்கும் தனித்தனி மாகாணசபை நிர்வாகங்கள் ஏற்படுத்தப்பெற்ற பின்னர் தமிழர்களைப் பொறுத்தவரை வடக்கிற்கும் கிழக்குக்கும் ஒரு பொதுவான அரசியல் சமன்பாடு பொருந்தாது என்கின்ற அரசியல் கள யதார்த்தத்தைக் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் தற்போதைய தலைமைப்பீடம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் அதனைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களது வயலில் எங்கே மேடு இருக்கிறது? எங்கே பள்ளம் இருக்கிறது, எங்கே வரப்பை உயர்த்த வேண்டும்? எங்கே புல்லுப் பிடுங்க வேண்டும்? எங்கே பாய்ச்சல் வைக்க வேண்டும் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். வயலில் எங்கே வக்கடை வைக்க வேண்டும் என்பதும் அவர்களுக்குத்தான் தெரியும். அது யாராக இருந்தாலும் வெளியாள் வந்து அதனை அவர்களுக்கு காட்டித்தரவேண்டிய அவசியம் இல்லை.

கடந்த 70 வருடகால தமிழ் தேசிய அரசியல் அவர்களுக்கு கற்றுக்கொடுத்துள்ள பாடம் என்னவெனில்; தமிழரசுக் கட்சியென்றாலும் சரிதான், அல்லது அதன் பின்னர் உருவான தமிழர் விடுதலைக்கூட்டணி என்றாலும் சரிதான் அல்லது தற்போதையத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்றாலும் சரிதான், அல்லது இனி வரப்போகின்ற தமிழ் மக்கள் கூட்டணி என்றாலும் சரிதான், கிழக்குத் தமிழர்களின் சமூக, பொருளாதார, அரசியல் நலன்களை அவர்கள் வென்றுதரப்போவதில்லை என்பதே. இக்கூற்று பிரதேச வாதம் அல்ல அனுபவங்களின் அடிப்படையிலான அரசியல் யார்த்த வாதம் ஆகும்.

கிழக்குத்தமிழர் ஒன்றியத்தின் தற்போதைய தலைமைப்பீடமும் வெல்லுகிற குதிரையைத் தேடிக் காசைக்கட்டுகிற தேர்தல் மைய அரசியலின் பக்கம் தனது பராக்குகளைச் செலுத்தி ஓடித்திரியாமல், ஒரு தெளிவான, உறுதியான தத்துவார்த்தத் தளத்தில் நின்று சமூக மாற்றங்களுக்கான அரசியலை நோக்கிக் கிழக்கு தமிழர்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தும் வகையில் தனது செயற்பாடுகளையும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டுமென்று கிழக்குத் தமிழர் ஒன்றியத்தின் ஸ்தாபர்கர்களில் ஒருவன் என்ற வகையில் நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.


## நிஷோ மிளகாய்த்தூள் விற்பனை நிலையம்,

**இல 22, பன்சல வீதி மட்டக்களப்பு.**

எம்மிடம் தரமான மிளகாய்த்தூள், சம்பல் தூள், தனித்தூள், மஞ்சள் தூள், மிளகுத்தூள், சீரகத்தூள், மல்லித்தூள் போன்றவையும் குரக்கன் மா, அரிசி மா, உழுந்து மா போன்றவையும் கிடைக்கும். மேலும் வைபவங்களுக்கு ஏற்ற பலகார வகைகள், முறுக்குகள், கோண்கள், லட்டு, மிக்சர், சீவல், பக்கோடா போன்றவையும் எம்மிடம் கிடைக்கும்.



விஷேட ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
தொடர்புகளுக்கு
-- செ. நிகில்ராஜ் --
0776352115


## 'நீங்கள் அரசியலில் ஈடுபட மறுப்பதற்குத் தண்டனையாகவே நீங்கள் உங்களை விடத் தாழ்ந்தவர்களால் ஆளப்படுகின்றீர்கள்'

# தேசிய இலங்கையை கட்டியெழுப்புவோம்

தேசிய புத்திஜீவிகள் அமைப்பு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புத்திஜீவிகள், தொழில் முயற்சியாளர்கள், கலைஞர்கள், விவசாயிகள், சிறிய நடுத்தர கட்டிட ஒப்பந்தகார்கள், கால்நடை வளர்ப்போர், மரக்கறி உற்பத்தியாளர்கள், கட்டிட மேசன், ஓடாவிமார்கள்(தச்சர்கள்), ஆசிரியர், கைப்பணிப்பொருள், அழகியல் பொருட்களுக்கான அலங்காரம் செய்பவர் ஆகியோரின் சங்கங்களின் தலைவர்களைக் கொண்டு தோழர்.ந.சுந்தரேசன் தலைமையில் 29.03.2019 திகதி அன்று 'தொழிலாளர் இல்லம்'- 32/1,தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு இல் ஓர் கூட்டம் நடத்தியது.


தேசிய புத்திஜீவிகள் அமைப்பு சுமார் 2½ வருடமாக கொழும்பில் கல்விசார் நடவடிக்கையின் பயனாக தேசிய கொள்கை ஆவணத்தை பெரும் எதிர்பார்ப்புடன் மாநாட்டின் முக்கிய நிகழ்வாக வெளியிட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அடைந்துள்ள மாபெரும் அரசியல் மற்றும் சமூக பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உண்மையாகவே இந்நாட்டை இன, மத, மொழி பொருளாதார ஏற்றத்தாழ்வு இன்றி நேசிக்கின்ற அதற்கான சுயநலமற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஒரு சாராரின் பங்களிப்பும் சரியான தூர நோக்கும் காணப்பட வேண்டும்.

அத்தகைய தலையீட்டிற்கும் அவசியமான அறிவுசார் சிந்தனையாளரின் பங்களிப்பை வழங்குவதற்கு அவசியமான தாக்கமுள்ள ஒரு சக்தி இது. கடந்த காலப்பகுதி முழுவதும் தேசிய புத்திஜீவிகள் அமைப்புக் குழு அணி திரண் கொள்கை ஆவணத்தை விடாமுயற்சியுடன் தலையிட்டு நாட்டை கட்டியெழுப்ப ஓர் தூண்டு சக்தியாக விளங்குவதற்கான பின்வரும் தலைப்புக்கள் கூடிய படைப்பினை உருவாக்கியது.

**அறிவுத்திறம் படைத்த இலங்கை**

அறிவுத்திறம் படைத்த இலங்கையை உருவாக்குவதே எமது ஒட்டுமொத்த அரசியல் முன்னெடுப்பின் மிக முக்கிய எதிர்பார்ப்பாகும். அறிவு, ஞானம், விஞ்ஞானம், தொழில்நுட்பமும் ஆராய்ச்சிகளும் முதலான துறைகளில் முன்னேறிய, திட்டமிட்ட ஒரு வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கையின் மனித வளத்தை பொறுப்புள்ள ஒரு பிரஜையாக உருவாக்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். ஒட்டுமொத்த சமூகமும் பெற்றுக்கொள்ளும் அதிசிறந்த




கல்வியின் மூலம் அறிவுத்திறம் படைத்த இலங்கையை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

அறிவுத்திறம் படைத்த இலங்கை:
1. கல்வி
2. தகவல் தொழில்நுட்பம்
3. விஞ்ஞான தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

முழுநிறைவான இலங்கை:
1. சுகாதாரம்
2. கலையும் கலாசாரமும்
3. விளையாட்டு
4. வீடமைப்பு

தூய்மையான இலங்கை:
1. சுற்றாடல்

வினைத்திறன் மிக்க இலங்கை:
1. போக்குவரத்து
2. அரசாங்க நிர்வாகம்
3. நீதிமன்றம்
4. பொலிஸ் சேவை
5. பிரஜையின் பொறுப்பு

உறுதிப்பாடான இலங்கை:
1. பொருளாதாரம்
2. பெருந்தோட்டக் கைத்தொழில்
3. விவசாயம்
4. கால்நடைகள்
5. மீன்பிடி மற்றும் நீரகவளக் கைத் தொழில்
6. எரிசக்தி
7. வெளிநாட்டுக் கொள்கைகள்
8. தேசிய பாதுகாப்பு

ஒழுக்கநெறிசார்ந்த இலங்கை:
1. புதிய அரசியலமைப்பு
2. தேசிய ஒற்றுமை
3. மகளிர் உரிமை
4. சிறுவர்களும் இளைஞர்களும்
5. முதியோர் சனத்தொகை
6. சிறைக்கைதிகள் நலன்புரி

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை



(சொல்லின் செல்வர் என்றும் மேலும் பல புனைபெயர்களிலும் அழைக்கப்பட்டவர் மட்டக்களப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான செ. இராசதுரை. அரசியல் ரீதியாக பலவிதமான விமர்சனங்களை எதிர்கொண்டு வந்த போதிலும் பல்லாளுமை மிக்க இவர் என்றும் மட்டக்களப்பு தொகுதியில் தேர்தலில் தோற்றதே கிடையாது. இலக்கியம், அரசியல், சமூகம் மற்றும் பொருளாதாராம் போன்ற துறைகளில் மாத்திரம் அல்லாது நாடகம், எழுத்து போன்ற துறைகளில் இவரது சாதனை பெரிது. காலவோட்டத்தில் இன்று பின்னோக்கிப் பார்க்கும் போது இவரைப் போன்ற ஆளுமைகளின் சாதனைகள் எமது மண்ணின் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு நல்ல அனுபவமாக, வழிகாட்டியாக, ஊக்கமாக அமையும் என்ற எதிர்பார்ப்பில் அவரைப் பற்றி நன்கு அறிந்த மூத்த எழுத்தாளரான இரா. தவராஜா அவர்களிடம் இந்த தொடரைக் கையளிக்கிறோம். -- ஆசிரியர்)

மட்டக்களப்பில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் வியாபார இறக்குமதித் தளமாக விளங்கியது புலியன்துறை(புளியந்துறை?) என அழைக்கப்பட்ட "றேகடி". இந்த றேகடியில் இந்தியா பாகிஸ்தான், ஆப்கானிஸ்த்தான், பர்மா போன்ற இன்னும் பல வெளிநாடுகளிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் பலபொருட்கள்




இறக்குமதி ஏற்றுமதி செய்யப்பட்டன. யாழ்ப்பாணமிருந்து புகையிலை, சுருட்டு, பனாட்டு, ஒடியல், பனங்குட்டான், பனையோலைப்பாய், கடகம், நீற்றுப்பெட்டி, நல்லெண்ணை, இலுப்பெண்ணை, எள்ளு, மாம்பழவகை, சின்ன வெங்காயம் மற்றும் இது போன்ற பல பொருட்கள் வியாபார நோக்கில் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. அவ்வாறு புகையிலை விற்பனை செய்ய றேகடியில் வந்திறங்கிய புகையிலை முதலாளிகளில் ஒருவர் பொன்னையா என்பவராவார். இவருடைய மனைவி சின்னமுத்து இவர்களின் புதல்வர்கள் கந்தையா, செல்லையா என இருவர்.

வந்திறங்கி வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கும் யாத்திரைகள் மேற்கொள்ளும் பக்தகோடிகளுக்குமென மோர்சாத்பிட்டியில் அவுலியாலேனில் யாழ்ப்பாண வியாபாரிகளினால் ஒருதங்குமடம் கட்டி நிர்மாணிக்கப்பட்டது. இம்மடம் பருத்தித்துறை கிருஸ்ணன் கோவிலுக்கு உரித்தாக்கப்பட்டது. இதன் பராமரிப்பாளராக அக்காலத்தில் சுருட்டு வியாபாரத்துக்கு வந்த மு.சின்னத்தம்பி என்பவரே அம்மடத்தை தான் அமரராகும் வரை பாதுகாத்து வழிநடாத்தி வந்தார். இவர் இராசம்மா என்னும் பெண்ணைத் திருமணம் முடித்து கோட்டைமுனை சோனகர் தெருவில் வசித்து வந்தார்.

இதேவேளை செல்லையாவின் அண்ணர் கந்தையா மோர்சாத்பிட்டி அரசடிப் பிள்ளையார்கோவில் வீதியில் வசித்த செல்லம்மா என்பவரை திருமணம்பண்ணி இருபத்திநான்காம் இலக்கத்தில் வசித்து வந்தார். தம்பி செல்லையா சத்துருக்கொண்டானை பிறப்பிடமாகக் கொண்ட வள்ளியம்மை என்பவரை மணந்து இருபத்தியாறாம் இலக்கத்தில் அருகருகே வசித்து வந்தார்கள்.

செல்லையாவுக்கும் வள்ளியம்மைக்கும் இருகுழந்தைகள். மூத்தபிள்ளை கண்மணி என்பவர். இளம் பிராயத்திலேயே காலமாகி விட்டார். அடுத்தவர் மட்டக்களப்பின் முடிசூடாமன்னன் என அழைக்கப்படும் இராஜதுரை 27.07.1927ல் அரசடிப்பிள்ளையார் கோவில் வீதியில் இருபத்தியாறாம் இலக்க வீட்டில் அவதரித்தார்.

உதயசூரியனின் ஜெகஜோதியான பிரகாசம் தவழும் பிள்ளையை சூழலில் இருந்த சகலரும் அள்ளிக்கொஞ்சி மகிழ்ச்சியில் திளைத்தனர். கிள்ளை மொழிப்பேச்சும் அன்பும் அடக்கமும் பண்பும் பணிவும் பெரியோரைக் கனம் பண்ணும் ஒழுக்கமும் நிறைந்து காணப்பட்டது பிள்ளை. சூழலிலிருந்த வீடுகளின் செல்லப்பிள்ளையாக வளர்ந்து மாணவப்பருவமானது. மட்டு/ மெதடிஸ்த மத்திய கல்லூரியின் மாணவனாக 1932ல் சேர்க்கப்பட்டார். பாடசாலையில் பலதுறைகளிலும் தன் திறமையைக் காட்டியதால் பாடசாலை உதைபந்தாட்டக் குழுவின் தலைவராக இருந்து வழிநடாத்தியமையால் அக்குழு தொடர் வெற்றிகளைக் கண்டது. பாடசாலைகளுக்கான ஒரு உதைபந்தாட்டப் போட்டியில் வேண்டுமென்றே எதிர்க் குழுவால் இவரின் காலை இலக்கு வைத்துத் தாக்கப்பட பலமாதங்கள் இவர் நடக்க முடியாமல் படுக்கையில் விழுந்தார். உண்மையில் இவர் காலில் தாக்கப்பட்டதைப் பார்த்த எதிரணியின் கப்டன் இவரைத் தாக்கிய தனது அணியின் வீரரை தாக்கி இவரைத் தாக்கியது தவறு என்று எச்சரித்துள்ளார். சூழலில் இருந்த மக்களும் வேதனையின் விளிம்பிலிருக்க ஆசிரியகுழாம் இவர் வீடுவந்து நலம் விசாரித்து செல்லுமளவுக்கு இவரின் செல்வாக்கு இருந்தது.

பாடசாலையில் ஆசிரியர்கள் மாணவர்களிடம் வழமையாகக் கேட்கும் கேள்வி. நீங்கள் படித்து என்னவாக வரப்போகிறீர்கள் என்பதே. இக் கேள்விக்கு இராஜதுரை அளித்த பதில் நான் எழுத்தாளராக வரப்போகிறேன் என்பதே. அந்தளவுக்கு அந்த வயதிலேயே எழுத்தை நேசித்தவர் இந்தப் பெருமகனார். பாடசாலையின் மாணவ மன்றங்களில் காந்தி, பாரதியார், விபுலானந்தர் போன்ற பெரியோர்களைப் பற்றி பேசி சிறந்த நாவன்மையுள்ளவர்

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

என மாணவப் பருவத்திலேயே முத்திரை பதிக்கத் தொடங்கினார். அதுமட்டுமல்ல மாணவ மன்றங்களில் நாடகங்களை எழுதி நடித்து நெறியாள்கையும் செய்தார். அந்நாடகங்களில் ஜெயமனோகரா அக்காலத்தில் பேர்பெற்ற நாடகமாக எல்லோராலும் புகழப்பட்டது.

பாடசாலையை விட்டு வெளியேறியதும் மட்டக்களப்புக்கு தேவையான ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை தயாரித்து செயல் படத் தொடங்கினார்.

### தமிழ்ப்பண்ணை

மட்டக்களப்பில் தமிழ்ப்பண்ணை என்ற பெயரோடு ஒரு புத்தகப் பண்ணையொன்றை ஆரம்பித்து தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து 1951-08-16ல் மட்டக்களப்புக்கு வருகை தந்து எம்.பி.எம். காசிம் புடவைக்கடையில் வேலை பார்த்த ஆறுமுகம் என்பவரை நடத்துனராக நியமித்து, தமிழ் வளர்க்கும் பணியில் தன் ஈடுபாட்டை காட்டத்தொடங்கினார். தமிழ்நாட்டிலிருந்து பத்திரிகைகள் சஞ்சிகைகள் அகராதிகள் என வரவழைத்து மக்களிடம் வாசிப்புப் பழக்கத்தை மேம்மடுத்த 14-04-1953ல் தமிழ்ப் பண்ணை. இலக்கம் 7 திருமலை வீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கண்ணதாசனின் தென்றல் பத்திரிகையின் கிளையும் இங்கு செயல்பட்டது. தமிழ்ப்பண்ணையின் நோக்கம் தமிழ் வளர்த்தல் தமிழனுக்கு ஆதரவு என்பதேயாகும். இதை நடத்திய ஆறுமுகம் என்பவர் அமரராகும் வரை தமிழ்ப்பண்ணை ஆறுமுகம் என்றே அழைக்கப்பட்டார்.

### சுத்தானந்தாமன்றம்

சங்காரவேல்(துணை அரச அதிபர்), மிருகவைத்தியர் சிவலிங்கம், தாமரைக்கேணி சுந்தரலிங்கம்மாஸ்டர், அன்புதாஸன் (முஸ்லீம்), பரமகம்சதாஸன், மு.ரு என அழைக்கப்பட்ட முருகேசு, தமிழ்பண்ணை ஆறுமுகம் என இன்னும் பலரைச் சேர்த்து இராஜதுரை அவர்களால் சுத்தானந்தபாரதி மன்றம் என்னும் பெயரில் 23.07.1953ல் ஒரு மன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. இம்மன்றம் பாடசாலை மாணவர்களுக்கிடையே கதை, கவிதை, கட்டுரை, பேச்சு, ஓவியம் என பல போட்டிகளை நடாத்தி பரிசில்களையும் வழங்கி, எதிர்கால பிரஜைகளை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது.

அதேவேளை வீரகத்திப்பிள்ளையார் வளவுக்குள் கோவிலின் அருகில் சுத்தானந்தபாரதி வாசிகசாலை என்ற பெயரில் நூல்நிலையம் ஒன்றும் இச்சங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது.

### தமிழ் வாலிபர் சங்கம்

மேற்காணும் இதேகுழுவுடன் இன்னும் பலர் சேர்ந்து 1955ல் மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கத்தை அங்குராப்பணம் செய்தனர். இச்சங்கத்தின் மூலம் கவியரசு கண்ணதாசன் தென்னகத்து சொல்லின் செல்வன் ம.பொ.சிவஞானம் நடமாடும் பல்கலைக்கழகம் என அழைக்கப்பட்ட நாவலர் இரா.நெடுஞ்செழியன் போன்றோரை மட்டக்களப்புக்கு அழைத்து, கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடாத்தி தென்னகத்துக்கும் தேனகத்துக்கும் இணைப்புப் பாலமாக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கமும் செயல்பட இந்த இராஜதுரை ஏதுவாக இருந்தார்.

### வரியிறுப்பாளர் சங்கம்

மட்டக்களப்பு மக்கள் எதிர்நோக்கும் வரிப்பிரச்சினைகளுக்கு முகங்கொடுக் கவென சபையுடன் பேச சங்கமொன்று தேவையென கருதி, மட்டக்களப்பு மக்களைத் திரட்டி மட்டக்களப்பு வரியிறுப்பாளர் சங்கம் என்ற பெயரில் சங்கமொன்றையும் ஸ்தாபித்தார். அச் சங்கத்துக்கு காலப் போக்கில் அன்கொன்டஸ் மணியம் என அழைக்கப்பட்ட கதிரவேலு மணியம் அவர்கள் தலைவராகவும் அதன்பின் மட்டக்களப்பு மாவட்ட வரியிறுப்பாளர் சங்கமாக அது மாற அதன் அமைப்பாளராக இரா.தவராஜா செயல்பட்டு இப்போது மாமாங்கராஜா தலைவராக இருக்கிறார் என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது.

### காந்திஜீ சேவாசங்கம்

மட்டக்களப்பிலும் மகாத்மா காந்தியின் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். அத்தோடு அவரின் திருவுருவச்சிலை நகரின் மத்தியில் நிறுவப்பட வேண்டும். என்ற ஆதங்கத்தில் காந்திஜீ சேவா சங்கம் என்ற பெயரில் சங்கமொன்றை உருவாக்கினார். இச் சங்கம் பின்பு கதிர்பாரதிதாசன், அமரர் வ.சிவசுப்பிரமணியம் ஆகியோரினால் வழிநடத்தப்பட்டு இப்போது அ.செல்வேந்திரன் அவர்களால் வழி நடத்தப்படுகின்றது.

### மானாவரிச்சங்கம்

மட்டக்களப்பு நெற்சந்தைப்படுத்தும் நிலையத்தில் வேலை செய்யும் மூட்டை தூக்கும் கூலித்தொலிலாளர்களின் வேதனை தரும் நிலைகண்டு அவர்களின் தேவைக்கென மானா வரிச்சங்கம் என்ற பெயரில் ஓர் சங்கத்தை நிறுவினார். பின்பு இச்சங்கத்தை அமரர். வ.பாலசிங்கம் என்பவர் நடாத்தி வந்தார்.

வாசகர்களே! கட்டுரையில் சமாந்தரமாக ஓடிக் கொண்டு இருக்கும் நான் தேவையின் காரணமாக தடைதாண்டியும் ஓட வேண்டி இருக்கிறது. எப்படி இருந்தாலும் இப்பதிவுக்கு உங்களை என்னோடு கூட்டிக் கொண்டே ஓடுவேன் வாருங்கள் அடுத்த இதழுக்காக ஓடுவோம்.

(தொடரும்)

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## நிலாவைப் பார்க்க வைத்த மின் துண்டிப்பு



‘குப்பி லாம்பில் குடிசைவீட்டில் வாழ்ந்த போதிருந்த சுகம், தற்போதைய மின்சார வெளிச்சத்திலும், மாளிகை வீட்டிலும் இல்லை’ என தங்கம்மாவும், தெய்வானையும் பேசிக்கொண்டனர்.

சில நாட்களாக மின்சாரத் துண்டிப்பு அமல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில், வீட்டு வாசலின் முற்றத்தில் அமர்ந்துகொண்டு பேசுகையிலேயே இதனை அவர்கள் குறிப்பிட்டனர்.

‘முன்னர் எல்லாம் நமது பகுதிகளில் குடிசை வீடுகள்தான் இருந்தன. அதற்குள் மின்விசிறி இருக்கவில்லை, மின்சாரமும் இருக்கவில்லை. ஆனால் குளிர்ச்சியும், அமைதியான சூழலும், இதமான நித்திரையையும் குடிசை வீடுகள் கொடுத்தன. குப்பி விளக்கே குடிசையை ஒளிர வைத்தது. எவ்வளவுதான் மின்விசிறியை பூட்டினாலும், இயற்கையாக வருகின்ற காற்றுக்கு ஈடுஇணையாக ஒன்றுமே இருந்துவிடமுடியாது’ எனக்கூறிய தங்கம்மா, தொடர்ந்தும் தன்மனதில் கிடந்ததை கொட்டுவதற்கு ஆரம்பித்தாள்.

‘நான் வாழ்ந்த காலம் ஒரு பொற்காலம் என்றே சொல்லுவேன் ஏனெனில் நான் பேசி மகிழ்ந்த தருணங்கள் மனிதர்களிடையே. இதனால் என் உள்ளத்தில் இருந்த சுமைகள் குறைந்தன. நான் வாய்விட்டு சிரித்த தருணம் நான் ஆரோக்கியமானவள் என்பதனை உணர்ந்தேன். இப்போதெல்லாம் மனிதர்களிடம் மனிதர்கள் முகம்கொடுத்து பேசுவதில்லை. தொல்லைபேசியோ அல்லது தொல்லைக்காட்சியுடனேயே பலரும் பேசுகின்றனர். இதனால் ஒருபக்கப் பேச்சுமட்டும்தான் இருக்கின்றதே தவிர, தமது பேச்சுக்கு ஆதரவும் இல்லை. இதனால்தான் பலர், இன்று மனநோயாளிகளாக உள்ளனர். வீட்டிலே உணவு உண்பதாகவிருந்தாலும் ஒருமித்தே உண்டனர். இதன்போது உறவுகள் பலமடைந்தன. இன்று ஒருவருக்கு ஒருநேரத்தில் உணவு இதனால் உறவுகள் விரிவடைந்திருக்கின்றன. இதுபற்றி பேச ஆரம்பித்தால் பேசிக்கொண்டே போகலாம்’ எனக்கூறிய தங்கம்மா, மின்சாரம் துண்டிக்க ஆரம்பித்ததினால்தான் நட்சத்திரங்களையும், நிலாவையும் பலர் பார்க்கின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றது என தனது ஆதங்கத்தினை போட்டுடைத்தாள்.

நான் எனது பிள்ளைகளை வளர்த்தபோது, பிள்ளைக்கு நிலாவைக்காட்டித்தான் உணவைத் உண்ணவைத்தேன். அப்போ அழகான வெளிச்சமும், தூரத்துப்பார்வையும் என்பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை கொடுத்திருந்தமையை உணர்ந்தேன். இன்றெல்லாம் மின்குமிழை காட்டி, தொல்லைபேசியை கையில் கொடுத்து உணவு கொடுக்கின்றனர். இதனால் பிள்ளையின் பார்வைத்திறனும் குறைந்துவிடுகின்றது. குறுகிய இலக்குக்குள்ளே அகப்பட்டுவிடுகிறார்கள். வானத்தினைப் பார்த்து, முன்நிலவா, பின்நிலவா என அறிந்து அதற்கேற்றால் போல் வாசலில் அமர்ந்து உறங்கி, கதைபேசிய காலமெல்லாம் எங்கேயோ போய்விட்டது. சின்னஞ்சிறுவர்களின் இரவுநேர நிலாவெளிச்சத்திலான விளையாட்டுக்களும் மறைந்துவிட்டன. பக்கத்தில் இருக்க வைத்து பாட்டி சொல்லித்தந்த இராமாயணக்கதைகளும், மகாபாரதக்கதைகளும் இன்றும் என் ஞாபகத்தில் உள்ளன. ஆனால் இன்றைய பிள்ளைகளுக்கு அக்கதைகள் தெரியுமா? என்பதும் சந்தேகமே. கதை இப்படித்தான் இருக்கும் என்பதை இப்போது, புத்தகத்தில் படிக்கின்றனர். அப்போது கதையைக்கூறி இதுதான் கதையென என்பாட்டி எனக்குகூறிவிட்டாள். இரவில் தூங்கும்போது பாட்டி சொன்ன கதைகளும், வீட்டிலே பேசிமகிழ்ந்த தருணங்களும் நல்லதொரு நித்திரையையும் கொடுத்துவிட்டன. இப்போதெல்லாம் மின்விசிறியின் சத்தம் நித்திரையை குறைத்துவிட்டது.

மின்சாரம் இல்லாவிட்டால் மனிதர்களே இயங்கமாட்டார்கள் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்ற இக்காலகட்டத்தில் அடிக்கடி மின்துண்டிப்பு இடம்பெறுகின்றது. இதனால் பல வேலைகளைச் செய்யமுடியாத நிலையேற்பட்டிருக்கின்றது என பேசிக்கொண்டாலும், ஒருபுறம் பலரை வீட்டின் முன்புறம் வாசலில் அமர்ந்திருந்து வானத்தினைப் பார்க்கும் நிலைமையினை உருவாக்கியிருக்கின்றமையினை எண்ணி சந்தோஷப்படவும் முடியும். நச்சத்திரங்களை எண்ணி, அவற்றினை பிடிப்பதற்கு நினைத்த காலங்களும் உண்டு. இப்போது நட்சத்திரத்தை, நிலாவை புத்தகத்தில்தான் பார்க்கவேண்டிய நிலையும் உருவாகியுள்ளமை கவலையானதே.

நிலாவெளிச்சத்தில் உணவு உண்டு, கதைபேசி, அமைதியான, விருப்புடனான நித்திரை சென்ற காலங்களை மீட்டிப்பார்க்க வைத்த மின்சாரதுண்டிப்புக்கு நன்றி கூறிய தங்கம்மா, வீட்டின் முற்றத்தில் அமர்ந்திருந்து நிலாவைப்பார்த்து பிள்ளைகளுக்கு கதைசொல்லி மகிழும் தருணங்களை ஏற்படுத்தும் போது, சிறுவர்களிடத்தில் நற்சிந்தனைகளை வளர்க்க முடியும் என்ற நம்பிக்கை வெளியிட்டவளாக நேரமும் இரவு 10 இனை கடந்துசெல்ல இருவரும் வீட்டினைநோக்கி சென்றனர்.

**படுவான் பாலகன்**



## பெண்ணின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எப்படி?

"பெண்கள் நாட்டின் கண்கள்" என்றான் பாரதி. ஆனால் இன்றைய நாட்களில் அக் கண்கள் எல்லாம் குருடாகி கொண்டிருப்பது வேதனைக்குரிய விடயம்.



இலங்கையில் ஒவ்வொரு நான்கு மணி நேரத்திலும் ஒரு கற்பழிப்பு முயற்சி நடைபெறுவதாக சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறை தொடர்பான ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேதான் போகின்றது. இன்று எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்களும் தங்களது திறமையையும் உழைப்பையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் என்ன பயன்? இன்றும் அடுப்பங்கரையிலே வாழ்நாளை கழிக்கும் பெண்களும் சமூக கட்டுப்பாடுகளுக்கு வளைந்து வளைந்து முதுகெலும்பு வளைந்து போன பெண்களும் இருக்கத் தான் செய்கிறார்கள். இப்போதைய நிலையை பார்த்தால் பிறந்ததிலிருந்தே பெண்பிள்ளைகள் தம்மை பாதுகாத்து கொள்ள போராட வேண்டி உள்ளது.

பாடசாலை, அலுவலகம், போக்குவரத்து, வீடு, வீதி என்று எல்லா இடத்திலும் பெண்குழந்தைகளுக்கு எதிராக வன்முறைகள் நடைபெறுகின்றன.

ஒரு வீட்டில் பெண் குழந்தை பிறந்துள்ளது என்று கேள்விப்பட்டாலே முகம் சுளிக்கிறார்கள். சீதனம் கொடுக்க வேண்டும் என்பதுதான் முக்கிய பிரச்சினையாக இருந்தது. ஆனால் இப்போது பெண் குழந்தைகளை எப்படி பாதுகாப்பாக வளர்ப்பது என்பதே பெற்றவர்களுக்கு ஒரு பெரிய கேள்விக்குறி.

பெண் பிள்ளைகளை பெற்றவர்களே உங்கள் குழந்தைக்கு சமையலும் அலங்காரமும் பயிற்றுவிப்பதற்கு பதிலாக ஏதாவது ஒரு துறை சார்ந்த சிறந்த கல்வியை வழங்குங்கள் அப்போது தான் அவர்களுக்கு சொந்த காலில் நிற்கும் தைரியம் உருவாகும். பெண் பிள்ளைக்கு ஏன் விளையாட்டு?
படிப்பு மட்டும் போதும் என்று நினைக்காதீர்கள், விளையாட்டில் ஈடுபட விடுங்கள். அது தான் அவர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும். சவால்களை எதிர்கொண்டு அவற்றை சமாளிக்கும் மனவலிமையை உருவாக்கும்.

அத்துடன் ஆண் பிள்ளைகளை போல பெண் பிள்ளைகளுக்கும் உடற்பயிற்ச்சி மற்றும் உடல் வலிமை சார்ந்த பயிற்சிகளை வழங்குவது அவசியம். தற்பாதுகாப்பு சம்மந்தமான கல்வியை பெண் பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே வழங்க வேண்டும்.

அது அவர்களை உடல்ரீதியாக வலிமையாக்கும், அவர்கள் ஆபத்து நேரங்களில் தம்மை தாமே பாதுகாத்து கொள்வதற்கான மனவலிமையையும் உடல்வலிமையையும் வழங்கும்.

பெற்றோர்களே உங்கள் பெண் பிள்ளைகளை சமூகம் கலாசாரம் என்ற போர்வையில் வீட்டுக்குள்ளேயே பூட்டி வைக்காதீர்கள்.

அவர்கள் வெளியில் சென்று தமக்குரிய உரிமைகளை வென்று வர அவர்களை வழிநடத்துங்கள்.

பெண் குழந்தையை பெற்ற ஒவ்வொரு தாய்க்கும் ஒரு முக்கியமான பொறுப்பு உள்ளது.

**சகி**

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மருத்துவத் தவறுகள்

## மருத்துவர் மீது குற்றஞ்சாட்ட முன்பாக கருத்தில் கொள்ள வேண்டியவை



மருத்துவர் சிவச்சந்திரன் சிவஞானம்

ஒரு மரணம் ஏற்பட்ட பின் சம்பந்தப்பட்டவர்களுக்கு அது பேரிழப்பு. ஒரு இழப்பு வந்ததும், அதை இன்னொருவர் தலையில் போட்டு விடுவது அந்த இழப்பினை தாங்கிக்கொள்வதற்காக மனித மூளை செயற்படுத்தும் ஒரு வழிமுறை.

அந்த இழப்பு மரணமாக இருக்கும்போது, அந்தப் பழியை இலகுவாக வைத்தியர்கள்மேல் போட்டு தங்கள் மனச்சோகத்தை குறைத்துக்கொள்கிறார்கள். இது இங்கே மட்டுமல்ல, உலகம்பூரா நடக்கும் நியதி.

இதை எதிர்கொள்வதற்கான பயிற்சியும் மருத்துவர்களின் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டே இருக்கும். ஆனால், இப்போதைய பிரச்சினை, ஒரு இழப்பினை உறவினர் வைத்தியர்மீது போடும்போது அது இலகுவாக பொதுப்பிரச்சினையாகி, வைத்தியர்களின் மீது காழ்ப்புணர்வு உள்ளவர்களால் வேறு திசை நோக்கி திருப்பிவிடப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகள் உண்மையில் யாரும் பாதிக்கப்பட்டாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த நன்மையையும் கொண்டு சேர்க்கப்போவதில்லை என்பது காழ்புணர்வாளர்களுக்கும் தெரியும்.

தனிப்பட்ட ஒரு சம்பவத்தை பற்றி எழுதாமல் பொதுவாக இலங்கையின் மருத்துவச் சேவை பற்றி சில விளக்கங்களை எழுதுவது பொதுமக்களுக்கு பிரயோசனமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

முதலில் ஒரு வைத்தியசாலை எப்படி தொழிற்படுகிறது என்று பார்ப்போம்.

வைத்தியசாலையில் ஒரு விடுதியை எடுத்துக்கொண்டால்,

பல படி நிலைகளில் வைத்தியர்கள் இருப்பார்கள்.

வைத்திய நிபுணர் எல்லாவற்றுக்கும் பொறுப்பாக இருப்பர். அவருக்கு அடுத்ததாக senior registrar/registrar எனப்படுபவர் இருப்பர். இவர்கள் பட்டமேற்படிப்பு பயிற்சி வைத்தியர்கள். சில வருடங்களிலோ மாதங்களிலோ வைத்திய நிபுணர்களாக வரப்போகிறவர்கள். அடுத்து SHO எனப்படும் வைத்தியர்கள் இருப்பர்கள். கடைசியாக HO எனப்படும் உள்ளகப்பயிற்சி வைத்தியர்கள் இருப்பார்கள். ஒரு விடுதியில் வைத்திய நிபுணர் பொறுப்பாக இருப்பார். வைத்திய நிபுணர் இல்லாதபோது இருக்கும் வைத்தியர்களில் சீனியர் பொறுப்பாக இருப்பார், ஆனால் அவர்கள் பெரிதளவில் முடிவுகளை எடுக்காமல், வைத்திய நிபுணர் இருக்கும் வைத்தியசாலைக்கு நோயாளிகளை அனுப்பி விடுவார்கள். பட்டமேற்படிப்பு வைத்தியர்கள் சில விடுதிகளில் மட்டுமே இருப்பார்கள்.

இதிலே HO எனப்படும் பயிற்சி வைத்தியர்கள் 24 மணிநேரமும் விடுதியில் இருப்பார்கள்.

அடுத்து SHO 24 மணிநேரமும் விடுதியில் இருக்கமாட்டார்கள். கடமையில் இருக்கும் SHO அவரது குவார்ட்டஸ் அறையில் இருப்பார்.

ஒரு நோயாளி அட்மிட் ஆகும்போது முதன்முதலில் HO எனப்படும் பயிற்சி வைத்தியர்களாலேயே பார்க்கப்படுவார். அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டால் SHO விற்கு அழைத்து உதவி கேட்பார். தேவைப்பட்டால் அவர் வந்து, உடனடியாகப் பார்ப்பார், அதற்கான அவசியம் இல்லையென்றால் அழைபேசியில் அறிவுரை வழங்குவார்.

SHO தேவைப்பட்டால் வைத்திய நிபுணரை அழைப்பார்.
இது இங்கே மட்டுமல்ல உலகம்பூரா நடக்கும் ஒரு நடைமுறை.

ஒரு அபிவிருத்தி அடைந்த நாட்டை எடுத்துக்கொண்டால் விடுதியிலேயே SHO நிலையில் இருப்பவருக்கான அறை இருக்கும். கிழமைக்கு அவருக்கு 48 மணித்தியாலம் என்ற அளவிலே நிர்ணயிக்கப்பட்ட கடமை நேரம் இருக்கும். ஆகவே அவர்கள் மிகவும் விரைவாக நோயாளிகளைப்பார்ப்பார்கள்.

நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து போதியளவு இருப்பார்கள். ஒருநாள் நைட் டியூட்டி செய்தால் அடுத்த நாள் விடுமுறை.

ஆனால் இங்கே இவை எதுவுமே இல்லை. எத்தனை நோயாளி இருந்தாலும், ஒரு விடுதியில் மொத்தம் 4 SHO தான் இருப்பார்கள்.

ஒருவர் காலை எட்டுமணிக்கு கடமை தொடங்கினால் அடுத்த நாள் மாலை 4 மணிவரை அவரது கடமை நேரம் இருக்கும்.

மொத்தம் 36 மணிநேரம் தொடர்ச்சியாக வேலை செய்தாலும் 8 மணிநேரம்தான் ஓவர் டைம் கிடைக்கும்.

வைத்திய நிபுணரின் நிலை அதைவிட மோசம், வெளிநாட்டில் ஒரு விடுதியில் பத்து பதினைந்து வைத்திய நிபுணர்கள் இருந்தாலும் இங்கே ஒரே ஒருவர்தான் இருப்பார். அவரது கடமை நேரம் ஒவ்வொருநாளும் 24 மணிநேரம். இதிலே காலை 8 மணிமுதல் 4 மணிவரை அவர் தனியாரில் வேலை செய்ய முடியாது. அதற்கப்புறம் அவர் எதுவும் செய்யலாம், ஆனால் அழைப்பெடுத்தால் ஆலோசனை வழங்கவேண்டும், தேவைப்பட்டால் போய்ப் பார்க்கவேண்டும்.

ஒரு நோயாளி வைத்தியசாலைக்குச் சென்றதும் என்ன நடைபெறுகிறது என்று பார்ப்போம்.

ஓபிடியில் பார்க்கும் டொக்டர் நோயாளியைப் பார்த்து அவர் அட்மிட் பண்ணப்படவேண்டியவரா என கணிப்பார். ஓபிடி யில் எப்போதும் பயிற்சி பெற்ற சீனியர் மருத்துவர்களே இருப்பார்கள். அட்மிட் பண்ணப்படவேண்டியவர் என்றால் அட்மிட் பண்ணும்போது அவர் விடுதியில் இருக்கும் வைத்தியரால் உடனடியாக பார்க்கப்படவேண்டுமா இல்லையா என்பதை தீர்மானித்து எழுதி அனுப்புவார்.

உடனடியாக பார்க்கப்படவேண்டிய தீவிர நோயாளிகள் உடனடியாக பயிற்சி வைத்தியரால் பார்க்கபட்டு சீனியர் வைத்தியருக்கு அறிவிக்கப்படும்.

மற்றவர்கள் விடுத்திக்குச் சென்ற உடனேயே பார்க்கப்படுவார்கள் என்றில்லை. வைத்தியர் வேறு நோயாளிகளுடன் busy ஆக இருந்தால் அதை முடித்துவிட்டுத்தான் பார்ப்பார்.

இங்கேதான் நிறையப்பேர் கோபப்படத்தொடங்குவது, விடுதிக்கு வந்து இவ்வளவு நேரமாச்சு, இன்னும் என்னை டொக்டர் பார்க்கவில்லை என்ற முதலாவது முறைப்பாடு இந்த இடத்தில்தான் தொடங்கும்.

பயிற்சி வைத்தியர் நோயாளியைப்பார்த்து, தீவிரமான நிலை என்றால் உடனடியாக சீனியர் வைத்தியருக்கு அறிவிப்பார். இல்லையென்றால் சீனியர் வைத்தியர் வோர்ட் ரவுண்ட் வரும்போதுதான் பார்ப்பார்.

சீனியர் வைத்தியர் பார்த்தபின் தீவிரம் கூடிய பிரச்சினை என்றால் வைத்திய நிபுணருக்கு அறிவிப்பார். அப்படியில்லாத நோயாளிகளை வைத்திய நிபுணர் வோர்ட் ரவுண்ட் வரும்போதுதான் பார்ப்பார். அதுவரை நோயாளி பொறுத்துத்தான் ஆகவேண்டும். இது இங்கே மட்டுமல்ல, எந்த நாட்டிலும் இருக்கும் நடைமுறை.

வைத்திய நிபுணருக்குக்கீழே இருக்கும் வைத்தியர்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்து, உரிய நோயாளிகளை அடையாளம் கண்டு மேல் படிநிலைகளில் உள்ளவர்களுக்கு அறிவிக்கிறார்களா என்று கண்காணித்து, போதிய அறிவுறுத்தல்களை வழங்கி தனக்குக்கீழே வேலை செய்யும் வைத்தியர்களுக்கு பயிற்சியை வழங்கவேண்டியதும் வைத்திய நிபுணரின் வேலை.

கடமைகளைச் செய்யும்போது நமது நாட்டின் பொருளாதார வளங்களின் காரணமாக நிறையச் சிக்கல்களை நாங்கள் எதிர்கொள்ளவேண்டியும் இருக்கும்.

உதாரணத்திற்கு, என்னையே எடுத்துக்கொண்டால், எனது விடுதியில் எனக்குக்கீழே 4 வைத்தியர்கள் வேலை செய்கிறார்கள். நால்வரும் புதியவர்கள். அவர்களால் சின்னச்சின்ன வேலைகளை மட்டுமே செய்யமுடியும். அவர்கள் பயிற்சி பெறும்வரை மற்றைய வைத்தியசாலைகளில் ஜூனியர் டொக்டர்கள் செய்யவேண்டிய வேலைகளை நான் தனி ஒருவராகத்தான் செய்யவேண்டும்.

இங்கே வேலைப்பளு அதிகம் என்பதை விட பொறுப்பெடுத்தல் என்பதுதான் முக்கியமானது. உண்மையைச் சொல்லப்போனால் வேலைப்பளு குறைவுதான். ஆனால் ஒவ்வொருநாளும் 24 மணிநேரமும் எப்போது அழைப்பு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டும். கரன்ட் கட் ஆகமுன் தொலைபேசியை முழுமையாக சார்ஜ் பண்ணி வைக்கவேண்டும்.

அநேகமான நாள் இரவுகளில் அழைப்பு வராது. கடமையில் இருந்தாலும் அறையில் இருந்து பேஸ்புக் பார்ப்பேன், படம் பார்ப்பேன், எழுதுவேன். எல்லாவற்றுக்கும் போதியளவு நேரம் கிடைக்கும். ஆனால் சில நாட்களில் ஜூனியர் டொக்டர்களினால் சமாளிக்கமுடியாத கேஸ்கள் வரும். அது இரவு 2 மணிக்குக்கூட வரலாம், சிலவேளை சேர்ட் பொத்தான்கூட போடாமல் ஓடிய நாட்களும் உண்டு. ஆகவே நிறைய நேரம் ஓய்வாக இருந்தாலும் ஒவ்வொரு நாளும் 24 மணிநேரமும் எப்போது பிரச்சினை வரும் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலே இருக்கவேண்டும்.

அடுத்து, இங்கே (எனது வைத்தியசாலையில்) வரும் நோயாளிகள் எல்லாருக்குமான சிகிச்சையை வழங்க முடியாது. உதாரணத்திற்கு குறைமாத பிரசவமாகும் ஆபத்தில் ஒரு தாய் வந்தால், பிரசவம் பார்க்கமுடியும் என்றாலும், குறைமாதப்பிள்ளை பிறந்தபின் கவனிப்பு வழங்க குழந்தை மருத்துவ நிபுணர் இங்கே இல்லை என்பதால், அவரை உடனடியாக யாழ்ப்பாணம் அனுப்பிவிடுவோம்.

நோயாளியோடு வரும் விளக்கம் குறைந்தவர், ஒரு பிரசவம்கூட பார்க்க முடியாத வைத்தியசாலை என்று பேஸ்புக்கில் எழுதுவார்.

அதேபோல் மயக்க மருந்து நிபுணர் இல்லை, ஜூனியர் டொக்டர்கள்தான் மயக்கமருந்து கொடுக்கிறார்கள். அவர்கள் சிக்கல் இல்லாத நோயாளிகளுக்குத்தான் மயக்கமருந்து கொடுப்பார்கள். ஆகவே, பல நோய்கள் இருக்கும் ஒருவருக்கு ஒரு சத்திர சிகிச்சை செய்யவேண்டி வந்தால், என்னால் செய்யக்கூடிய

# விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே லண்டனில் உள்ள ஈகுவேடார் நாட்டின் தூதரகத்தில் கைது செய்யப்பட்டார்.

பாலியல் தாக்குதல் தொடர்பாக ஒன்றிலிருந்து தப்பிக்க ஸ்வீடனுக்கு நாடு கடத்தப்படுவதை தடுக்க






ஏழாண்டுகளுக்கு முன்பு தூதரகத்தில் தஞ்சம் கோரியிருந்தார் அசாஞ்சே.

அசாஞ்சேவை கைது செய்த காவல்துறை, அவரை காவலில் வைத்திருப்பதாகவும் விரைவில் வெஸ்ட்மினிஸ்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் எனத் தெரிவித்தனர்.

சர்வதேச விதிகளை ஜூலியன் அசாஞ்சே தொடர்ந்து மீறியதால், அவருக்கு தாங்கள் தஞ்சம் வழங்கியதை திரும்பப்பெறுவதாக ஈகுவேடார் நாட்டின் அதிபர் லெனின் மொரீனோ தெரிவித்தார்.

ஆனால் இது தொடர்பாக விக்கிலீக்ஸ் வெளியிட்ட ட்விட் செய்தியில், சர்வதேச சட்டவிதிகளை மீறி அசாஞ்சேக்கு தஞ்சம் வழங்கப்பட்டதை சட்டவிரோதமாக ஈகுவேடார் ரத்து செய்ததாக குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டனின் உள்துறை செயலர் சஜித் ஜாவிட் வெளியிட்ட ட்விட் செய்தியில், "ஜூலியன் அசாஞ்சே தற்போது போலீஸ் காவலில் உள்ளார் என்பதை நான் உறுதி செய்கிறேன். பிரிட்டனின் சட்டநடைமுறையை அவர் எதிர்கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

# அரச அதிபரின் புத்தாண்டுச் செய்தி



கசப்பான அனுபவங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து நிம்மதியாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வாழ வழிசெய்யும் வருடமாக புதிய வருடம் அமைய வேண்டும் என்று மட்டக்களப்பு அரச அதிபர் உதயகுமார் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

'மலரவிருக்கும் விகாரி வருடத்தை மகிழ்ச்சிகரமாக வரவேற்பதுடன் இத்தமிழ் சிங்கள புத்தாண்டு எமது மக்களின் கடந்த கால கசப்பான அனுபவங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து துன்ப துயரங்கள் நீங்கி நிம்மதியாகவும் மகிழ்ச்சிகரமாகவும் வாழ வழிசெய்யும் புது வருடமாக இது அமைய வேண்டுமென இந்நாளில் வல்லமை பொருந்திய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவரது வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'இப்புத்தாண்டு எமது மாவட்டத்தில் தனிநபர்களின் குடும்ப வாழ்க்கைக்கு ஒளியூட்டுவதோடு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வுடன் கூடிய நல்லுறவினைக் கட்டி எழுப்பவும் புதிய முயற்சிகளையும் புதிய சிந்தனைகளையும் கொண்டு வரும் நல்லாண்டாகவும் அமைய வேண்டும்.

இப்புத்தாண்டு எமது உள்ளங்களிலும் இல்லங்களிலும் அக இருளை நீக்கி ஒளியேற்றுவதாக அமைய பிரார்த்திப்பதுடன் இப்புத்தாண்டில் நமது பிரதேசம், மாவட்டம், மாகாணம் மற்றும் முழு நாட்டிலும் பல புதிய அபிவிருத்திகளைக் கொண்டு வரும் நல்லாண்டாகவும் அமைய வேண்டும். இந்நன்னாளில் அனைத்து மாவட்ட மக்களுக்கும் மாவட்டத்தின் சீரான நிர்வாக சேவைக்கு என்னுடன் இணைந்து பங்களிப்பு செய்துவரும் அனைத்து பணியாளர்கள், சமூக சேவையாளர்கள், ஒத்துழைப்பு மிகுந்த அரசியல் தலைமைத்துவங்கள் அனைவருக்கும் உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.



# தமிழகத் தேர்தல் களம்

கடந்த இருபது நாட்கள் தமிழகத்தை குறுக்கு நெடுக்காக பயணித்ததில் பல தரப்பட்ட மக்களையும் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

காலை நேர காப்பி கடை வாசிப்பு இன்னமும் தமிழகத்தில் மாறாமலேயே இருக்குது. தமிழகத்தில் எனக்கு மிகவும் பிடித்த விடயமும் என்னை வெகுவாக ஈர்த்ததும் இதுதான். அதிகாலையில் நடந்து போய் பத்திரிகை வாங்கி, காப்பி குடித்து வருபவர்களோடு அசியல் அலசும் நேரம் அது. தமிழகத்தின் இன்றைய நிலமையை படம் பிடித்து காட்டும் கண்ணாடி.


சென்னையில் இருந்து
**பாலசுகுமார்**



பொதுவாக பார்த்ததில் தி.மு.க



கூட்டணிக்கு பெரும் ஆதரவு இருப்பதாக தெரிகிறது. ஆட்டோவில் ஏறும் போது நான் பேச்சுக் கொடுத்த எல்லோரும் "இந்தமுறை தி.மு.க தான் வரும்"என்று கணிப்புச் சொல்கிறார்கள்.



ஒரு ஆட்டோகாரர் இப்படி சொன்னார் 'மக்கள் கோபத்தில் இருக்கிறார்கள். அமைதியாய் இருக்கிறார்கள் தேர்தல் அன்று தங்கள் கோபத்தை காட்டுவார்கள்'.

தலைமை வெற்றிடம் என்பது பத்திரிகைகளும் ஊடகங்களும் கட்டமைத்த பிரசாரம். எந்த ஊடகத்தையும் நம்ப முடியவில்லை, நடு நிலை என்பது இல்லாமல் விவாதங்களில் கேட்கப்படும் கேள்விகள் அவர்கள் கட்டமைக்க விரும்பும் ஒரு நோக்கோடு நீள்கின்றன. மறைமுகமாக அரச ஆதரவுக்குள் குறுகி நிற்கும் நேர்மை தெரிகிறது.

நடு நிலை

என்பதை அவர் பிரசாரங்கள் காட்டுகின்றன.

அரசியல் விமர்சகர்களாக முன் மொழியப்படும் கோலாகலங்களும் மால மாயங்களும் அ.தி.மு.க ,பி.ஜே.பி கொள்கை பரப்பு செயலாளர்களாக செயற்படும் அவலம் தெரிகிறது.

ஸ்ராலின் தமிழகம் முழுவதும் பிரமாண்டமான பொதுக் கூட்டங்களில் பங்கு பற்றுகிறார். நடந்து சென்று உழவர் சந்தைகளிலும் கடை வீதிகளிலும் மக்களை சந்திக்கிறார். சாதாரண மக்கள் முன் சாதாரணனாகத் தென்படுகிறார். இன்றைய சூழ் நிலையில் கரிஸ்மா மிக்க ஒரே ஒரு தமிழக தலைவராகத் தெரிகிறார்.

முதல்வர் ஹைடெக் மைக்கோடு ஒரு கோமாளி போல பிரசார வாகனத்தில் உலா வருகிறார். காட்சி ஊடகங்கள் அவரை குளோசப்பில் காட்டி அவரது மக்கள் செல்வாக்கை நிரூபிக்கின்றன.

துணை முதல்வர் தன் மகன் தேனி தொகுதியில் வென்றால் போதும் என்ற அக்கறையோடு செயற்படும் பதற்றம் புலப்படுகிறது.

தனியாக நிற்கும் தினகரன் துணிச்சல் மிக்கவர்

கமல் யாருக்காகவோ வேலை செய்கிறார் என மக்கள் பேசிக் கொள்வதும் இவருக்கு தேவையில்லாத வேலை என முணுமுணுப்புகளும் உறைந்து கிடக்கின்றன.
சீமான் தனித்து தன் வழியில் பயணம் செய்கிறார்.



திருமாவளவன் நம்பிக்கை தருகிறார்.

கம்யூனிஸ்டுகள் களத்தில் தீவிரமாக வேலை செய்கிறார்கள்



சிறுபான்மை மக்களும் கட்சிகளும் தி.மு.க கூட்டணியில் குறிப்பாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி , தமீமுன் அன்சாரி கூட்டணிக்கு பலம் சேர்க்கின்றனர்.

வேல்முருகன் போன்ற தமிழ் தேசிய வாதிகள், திரை, கலை இலக்கிய நண்பர்கள் களத்தில் தி மு.க கூட்டணியோடு நிற்கின்றனர்.

நம்பிக்கை தரும் பலரை நாம் இந்த தேர்தல் களத்தில் பார்க்க முடிகிறது.

கனிமொழி
தமிழிச்சி தங்க பாண்டியன்
ரவிக்குமார்
வெங்கடேசன்
ஜோதி மணி

என கலை இலக்கிய ஆளுமைகளின் வெற்றி கண்ணுக்கு தெரிகிறது. வேறு எந்த கூட்டணியிலோ கட்சியிலோ இத்தகைய ஆளுமைகளைக் காண முடியவில்லை.

தி.மு.க வில் "செல் போன்" கூடத்தன்னிடம் இல்லை என கூறும் ஒரு சாமானியமான மனிதனை தேர்தல் களத்தில் காண்கிறோம்.

அகில இந்திய அளவில் காங்கிரசின் தேர்தல் அறிக்கை பெருமளவில் தி.மு.க வின் குரலாக இருக்கிறது. இந்திய ஒற்றுமை மாநில சுயாட்சியை நோக்கி நகரும் நல்ல அறிகுறி. பெண்கள் உரிமை பற்றிய அக்கறை மேலை நாடுகளில் இருப்பது போலான குறைந்த பட்ச வருமானம் உடையோருக்கான நிதி ஆதாரம் மாக்சிய நோக்கை வெளிப்படுத்தி நிற்கிறது. நேருவின் பேரனாக ராகுல் முகம் காட்டுகிறார். மீனவர்,விவசாயிகள் பற்றிய அக்கறையை வெளிப்படையாக உணர முடிகிறது.



# தீரனியம்

"பவனிற்கு தற்போது எட்டு வயது. அவன் பிறந்த மூன்றாம் மாதம் தாயின் முகம் பார்த்திருக்க வேண்டும். ஓன்பதாம் மாதம் சத்தங்களிற்கு உடல் அசைவுகளை காட்டியிருக்க வேண்டும். மற்றவர்களைக் காணும் போது உற்சாகமாக இருந்திருக்க வேண்டும். ஒரு வயதில் மெதுவாக கதைக்க ஆரம்பித்திருக்க வேண்டும். தனது தேவைகளிற்கான அறிகுறிகளை அழுகை மூலம் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இரண்டு வயதாகும் போது தனது பெற்றோரை, சகோதரர்களை இனங்கண்டு அவர்களுடன் கூடி விளையாடி மகிழ்ந்திருக்க வேண்டும். விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடி இருக்க வேண்டும். மூன்று வயதில் மற்றவர்களுடன் வெளியில் போக, விரும்பியதை கேட்க, சேர்ந்து விளையாட, அம்மாவின் முகம் பார்த்துக் கதைக்க என்று இவையெல்லாம் சாதாரணமாக நடந்திருக்க வேண்டும். இதுவரை இவை நடக்கவில்லை. பவன் ஒரு தனி உலகம். இதுவரை அவன் வாயிலிருந்து தாய்மொழி வரவேயில்லை. அவனது பாஷ' இதுவரை யாருக்கும் விளங்கவில்லை. ஒலிகளிற்கு பெரிதாக மாற்றங்களைக் காட்டவில்லை. அவனுக்கு விருப்பமான காருடன் மட்டும்தான் அவனது நேரம் அதிகம் செலவிடப்படுகிறது. தனது சகோதர, சகோதரிகள், பெற்றோர், பாடசாலையில் சக மாணவர்களுடன் சேர்ந்து விளையாட, கூடிக்குலாவி அகம் மகிழ அவனால் முடியவில்லை. யார் இந்த பவன்? இவன் ஒரு மாற்றுத்திறனாளி. அவனிடம் இருக்கும் ஆளுமைகள், ஆற்றல்கள் மற்றைய சிறுவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. ஆனாலும் பவனால் ஏனையவர்கள் போல செயற்பட முடியும், சாதிக்க முடியும்.

தற்சிந்தனையாளர்கள் (ஓட்டிசம்) உலகலாவிய ரீதியாக, பிறக்கின்ற பிள்ளைகளில்"ஓட்டிசம்" எனப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள் மிக அதிகளவில் இனங்காணப்படுகின்றார்கள். அமெரிக்காவில் பிறக்கின்ற 68 குழந்தைகளில் ஒருவர் என்ற விகிதத்திலும் இங்கிலாந்தில், அவுஸ்ரேலியாவில் 100 குழந்தைகளில் ஒருவர் என்ற அளவிலும், ஆச்சரியமாக இலங்கையில்˙பிறக்கின்ற 93 குழந்தைகளில் ஒருவர் எனவும் இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்காவில் 3.2 மில்லியன் மக்கள் ஓட்டிசத்துடன் வாழ்கிறார்கள். பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளில் இதன் தாக்கம் அதிகம். நியூட்டன், அல்பேர்ட் அனஞ்டீன், சார்ள்ஸ் டார்வின், பில்கேட்ஸ், அப்துல் கலாம் போன்றவர்களிலும் மிதமான அளவில் "ஓட்டிசம்" இருந்ததாக கூறப்படுகின்றது. 1943 டாக்டர் லியோ கானர் என்ற உளநல மருத்துவர், ஓட்டிசம் குறித்த விபரிப்புக்களை வெளியிட்டார். அன்று முதல் உலகளாவிய ரீதியாக இப்பிரச்சினைகள் இனங்காணப்பட்ட போதிலும் பெரும்பாலான நாடுகளில் இன்றுவரை இப்பிள்ளைகளுக்கான தனித்துவமான இடையீடுகள், பாடசாலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. பொதுவாக இவ்வாறு இனங்காணப்படுகின்ற பிள்ளைகள் மூளை விருத்தி சார்ந்த மாற்றுத்திறனாளிகள் பாடசாலைகளுக்கோ சாதாரண பாடசாலைகளிற்கோ அனுப்ப முடியாத அளவில் அவர்கள் தனிமைப்பட்டு வீடுகளிலேயே உள்ளார்கள்.

இலங்கையிலும்சிறுவர் மருத்துவர்கள,; மனநல மருத்துவர்கள் இப்பிரச்சினைகளை இனங்கண்ட போதும், அவர்களுக்கான விசேட அணுகுமுறைகள், கற்பித்தல் முறைகள் சாதாரண பாடசாலைகளுடன் இணைத்து விடுதல், பெற்றோர்களிற்கான வழிகாட்டல்கள், சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மிகக் குறைவாக உள்ளன. அரசாங்கமும் இதனது தேவையை இதுவரை சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.


"ஓட்டிசம்" பிள்ளைகளிற்கான பாடசாலைகள் இனங்காணப்படுகின்ற மாற்றுத் திறனாளிகளில் சாதாரண (ஆடைன), மிதமான (Moderate), பாரிய (Severe) அளவில் பிரச்சினைகள் இருப்பதை கண்டு கொள்ளலாம். பிள்ளைகள் மூன்று வயதை அடைவதற்குள் முதலில் பெற்றோர்களாலும் பின்னர் முன்பள்ளி ஆசிரியர்களாலும் இனங்காணப்படுவர். இவர்களில் கண் தொடர்பு (நுலந உழவெயஉவ), சமூக தொடர்பாடல் (ளுழஉயைட ஊழஅஅரளெைஉயவழைெ) பாதிக்கப்படுவதுடன் தமது தேவைகளை கேட்டுப் பெற்றுக் கொள்ளுதல், சேர்ந்து விளையாடுதல், உடல் உணர்வுகளை வெளிக்காட்டுதல் போன்றவையும் பாதிக்கப்படுவதுடன் இவர்களது பேச்சு.˙. மொழிநடை மாறுபட்டதாகவும் அமையும். ஒரே விடயத்தை மீண்டும் கதைக்கலாம். நாங்கள் சொல்லும் விடயத்தையே மீண்டும் சொல்லலாம் (Ecolalia) அல்லது பதிலளிக்காமல் தன்வழியே குறிப்பிட்ட விளையாட்டு அல்லது செயலுடன் (Sterotype) ஈடுபடலாம். இம்மாணவர்களை ஆரம்ப வகுப்புகளில் சாதாரண மாணவர்களுடன் சேர்த்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமாக அமையும். இல்லாவிட்டால் இதற்கென பயிற்றுவிக்கப்பட்ட விசேட ஆசிரியர்களின் உதவியுடனேயே கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும். இருந்த போதும் இவர்களிற்கான பிரத்தியேக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அங்கு ஆரம்ப செயற்பாடுகளை ஆரம்பித்து, அவற்றில் முன்னேற்றம் கண்டுள்ள சிறுவர்களை ஆசிரியர், பெற்றோர், சகமாணவர்கள், ஆகியோருடன் கலந்துரையாடி சக மாணவர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டு வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதே மிகவும் பயனுடையதாகும்.

**தீரன்**

சாரா பிற்றர் (ளுயசய டீவைவநச) ஓர அமெரிக்க வழக்கறிஞர. முன்பள்ளி வகுப்பிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்காவில் பள்ளியாண்டு தொடங்கும் போது, தன் மகனின் வகுப்பிற்குச் சென்று தன் மகனைப் பற்றியும், மகனின் பலவீனங்கள், இயலாமைகள் பற்றியும் மகனின் ஆசிரியர்களிற்கும் வகுப்பு மாணவர்களிற்கும் ஒரு செயன்முறை கலந்துரையாடலை நடத்துவது அவரின் வழக்கம்.

தனது மகனின் விருப்பு வெறுப்புகள், ஆர்வம், பொழுது போக்குகள், பலம், பலவீனம், அவனின் நாளாந்தச் செயற்பாடுகளை செய்வதில் உள்ள சவால்கள் பற்றி அவர் அவர்களுடன் கலந்துரையாடுவார். இதனால் அவரது மகனிற்கும், ஆசிரியர்களிற்கும் மற்றைய மாணவர்களுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்த உதவியது. அங்கு கிடைத்த பின்னூட்டல்

## அலகு 2




சாராவை மேலும் ஊக்கப்படுத்தியது. இச்செயன்முறை போல அனைத்து மாணவ மாற்றுத்திறனாளிகளுக்கும் பயன்பட வேண்டும் என்ற அவரது அவாவே "Ethan the Brave" என்ற புத்தகமாக மலர்ந்தது. 2015 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் சின்சினாற்றி நகரில் நடந்த மாற்றுத்திறனாளிகளிற்கான குறும்பட விழாவில், தன் மகனின் கதையை படமாக்கி வெளியிட்டார். இக் குறும்படத்தினூடாகவும், புத்தகத்தினூடாகவும் மாணவ மாற்றுத்திறனாளிகளை புரிந்துணர்வுடன் வரவேற்கவும், ஆதரவளிக்கவும் வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய செயற்றிட்டமொன்றை உருவாக்கினார். இக்கதையின் பிரதானமான பாத்திரமான "தீரன்" பல மாற்றுத்திறனாளிகளின் அன்றாட அனுபவத்தினூடாகவே அமையப் பெற்றுள்ளான்.

குறித்த ஒரு இயலாளியின் பெயரின் சமூக நாணம், சமூக அச்சம் களையப்பட்டு "தீரனியம்"என்கின்ற தமிழ்ச்சொல் இங்கு "ஓட்டிசம்" மாற்றுத்திறனாளிகளைக் குறிக்க பயன்படுகின்றது. அனைத்து மாற்றுத்திறனாளிகளும் பல சவால் களை தமது அன்றாட வாழ்வில் எதிர் நோக்கினாலும், தாமும் மற்றைய சாதாரண மாணவர்களைப் போல கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஆங்கிலத்தில் உள்ள மூலப்பிரதியை தமிழில் அமெரிக்காவில் உள்ள வைத்திய கலாநிதிகளான திருமதி சிவானி பத்மராஜா, திருமதி காவேரி சிவரூபன் ஆகியோரின் மொழிபெயர்ப்பை அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO) இலவசமாக அச்சடித்து வெளியிட்டுள்ளது. இரண்டு வருடங்களிற்கு முன்னர் வெளிவந்த "கரிதாஸ்" திரைப்படம் தீரன் பற்றியது.

தீரனியம்மாற்றுத்திறனாளிகள் பாடசாலை மட்டக்களப்பில் உளநல மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மருத்துவம்சாரா உத்தயோகத்தர்கள் என பலதரப்பட்டவர்களும் தீரன்களை இனங்கண்டார்கள். மருத்துவப் பரிசோதனைகள், சாதாரண சிகிச்சை முறைகள், என்பன கொடுக்கப்பட்ட போதிலும், இவர்களிற்கென தனியான பாடசாலை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நீண்ட கால ஆவல் பரவலாக உணரப்பட்டது. அண்மையில் கத்தோலிக்க திருச்சபையின் Brothers of Charity (பிரதர்ஸ் ஒவ் சரிட்டி) தன்னார்வ தொண்டர் அமைப்பு உளநல மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், பொது மருத்துவர்கள், பேச்சு சிகிச்சையாளர், தொழில்வழி சிகிச்சையாளர், இயன்மருத்துவர், சமூக சேவை உத்தியோகத்தர்கள், விசேட கல்வியலகு ஆசிரியர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், நலன் விரும்பிகள், பாடசாலை அதிபர்கள், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பயனாக அமெரிக்காவில் உள்ள அனைத்துலக மருத்துவர் நல அமைப்பின் நிதிப் பங்களிப்புடன் கோவிந்தன் வீதியில் இலங்கை வங்கிக் கிளைக்கு முன்னால் "தீரனியம்" மாற்றுத்திறனாளிகள் பாடசாலை அமையப் பெற்றுள்ளது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஐந்தாவது செவ்வாய் கிழமைகளில்

பா. யூடி ரமேஸ் ஜெயகுமார்.
அருட் சகோ. வி. மரியதாஸ்.

நடைபெறும் சிறுவர் வழிகாட்டல் கிளினிக் மூலம் இனங் காணப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள் இப்பாடசாலையின் பல்வேறு சிகிச்சை முறைகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள். இங்கு விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட சிகிச்சையாளர்களின் உதவியுடன் இவர்களிற்கான வகுப்பறைச் செயற்பாடுகள் நடைபெறும். அத்துடன் பேச்சு சிகிச்சையாளர், தொழில்வழி சிகிச்சையாளர், இயன் மருத்துவர் என ஒரு ஒழுங்கில் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கு ஏற்றாற் போல் உதவுவார்கள். முன்னேற்றம் உள்ள பிள்ளைகள் விசேட தேவைக்குரிய ஆசிரிய ஆலோசனையின் வழிகாட்டலில் அண்மையிலுள்ள பாடசாலைகளில் இணைத்து கண்காணிக்கப்படுவார்கள். கூடிய அளவில் பாதிக்கப்பட்ட, பாடசாலைச் செயற்பாடுகளிற்கு பொருத்தமற்ற மாணவ மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதார பயிற்சிகளிற்கு (Vocational Training) அனுப்பப்படுவதோடு, திறன் சார்ந்தவர்கள் மாவட்டத்திலுள்ள ஏனைய தொழிநுட்பக் கல்லூரிகளில் இணைத்துவிடப்படுவார்கள். வாழ்வாதாரத்தை, தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வரை இப்பாடசாலை தீரனியர்களுற்கு உதவியாக அமையும். அத்துடன் மருத்துவ மாணவர்கள், தாதிய மாணவர்கள், பயிலுனர் ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தீரன் குறித்துக் கற்றுக்கொள்ள இப் பாடசாலை உதவி செய்யும். சமூக விழிப்புணர்வு, ஏற்றுக்கொள்ளுதல், உதவிசெய்தல் போன்ற செயற்பாடுகளிற்கான ஆக்கபூர்வமான கொள்கைகளையும், தொடர்ச்சியான கலந்துரையாடல்களையும் தீரனியம் பாடசாலையூடாக மேற்கொள்ள முடியும்.

**வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்**

**23**

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

# அரவான் களப்பலி

அதன்பின் இரவு மூன்றரை மணியளவில் அரவானைக் களப்பலி கூட்டும் சடங்கு நடைபெறும். வனவாசத்தில் தருமரும், வீமனும், அருச்சுனன் தவநிலையில் அருச்சுனனும் தருமரும் முக்கிய இடம்பெறுவதைப் போலஅரவானைக் களப்பலிகூட்டும் சடங்கில் தருமரும், திரௌபதியும் முக்கிய பாத்திரங்களாகின்றார்கள்.

முதல் நாள் அரவானைப் போல ஒரு மண்ணுருவஞ் செய்து கோயிலின் ஒரு பக்கத்தில் மூடி வைத்திருப்பர். அருச்சுனன் தவநிலைக்குச் செல்லுகையில் அரவானை எடுத்துச்சென்று கமலகன்னி? கோயிலுக்குக் கொண்டு வைப்பர். தவநிலை முடித்துத் தருமரிடம் வந்து விபரங்களைக் கூறிவிட்டு அருச்சுனன் சென்றதும் திரௌபதியும் தருமரும் கமலகன்னி கோயிலுக்குச் செல்வர். சென்று அங்கு அரவானின் சிரத்தைத்தருமர் பிடிக்க, திரௌபதி அவன் சிரத்தை அறுப்பாள். சிரமறுக்கையில் பின்வரும் பாடல்களைப் பாடித் திரௌபதி புலம்புவாள்.

“விநாயகரை முன்னிறுத்தி என்மகனே அரவானே நாக கன்னி புத்திரனே உன் சிரமறுக்க மனம் துணிந்தோம். தந்தை சிரம்பிடிக்க என்மகனே அரவானே நாககன்னி புத்திரனே பெற்ற பிள்ளையை நாம் கழுத்தறுத்தோம். பாரதமும் என்னாலே என்மகனே அரவானே நாககன்னி புத்திரனே படை, போரும் என்னாலே நாங்கள் பூவுலகம் ஆளவென்று என்மகனே அரவானே நாககன்னி புத்திரனே பெற்ற புத்திரனைக் கழுத்தறுத்தோம்."


திரௌபதி புலம்பும் இப்பாடல்கள் இனிய இசையும் மனதைக் கவரும் தன்மையும் வாய்ந்தவை. துயரம் கவிந்த ஒரு சோகச் சூழ்நிலையை தோற்றுவிப்பவை. தொடர்ந்து திரௌபதி அரவானின் சிறப்புக்களையும், துரியோதனன் கொடுமைகளையும், தமது நிலையினையும் பாடல்களிற் பாடி அவன் தியாகத்தைப் பலவாறு புகழ்ந்து, தாங்கள் எப்படியும் இதற்கும் சேர்த்துத் துரியோதனனைப் பழி வாங்குவோம் எனப் புலம்புவாள்.

இப்பாடல் முடிந்ததும் கோயிலில் வீரகும்பம்' நிறுத்துவர்.

பின்னர் கடற்கரை செல்வர்.

சென்று மீண்டு வரும் வழியில் வீமனுக்கு ஆடிச் செல்பவர் கன்னிமரம் வெட்டி வந்து அதனை 4துண்டாக்கி, 4 மூலைக்கும் நாட்டிக் கோயில் முன்றலில் தீக்குழி உண்டாக்குவர். 7 மணிக்கு குருக்கள்வந்து ஹோமம் வளர்த்து, தீ மூட்டுவார். திரௌ பதியும், தருமருமே தீயை வைப்பார்கள். பின்னர் எல்லாரும் சென்று கடலிற் குளித்துவிட்டு, உடல் முழுவதும் மஞ்சள் பூசி கையில் அரிசியுடன் வந்து, அரிசியைத் தீக்குழிக்குள் எறிந்துவிட்டுக் கோயிலை வலம் செய்து வந்து தீக்குளிக்க முன் நிற்பர். பின், தருமர் முதலிற் தீக்குளிக்குள் இறங்க, பின்னர் எல்லாரும் வரிசையாக






இறங்கித் தீப்பாய்வர். இத் தீப்பாய்தலுடன் அன்றைய இறுதிக் காட்சி முடிவடையும். முன்னர் கூறப்பட்டசடங்குகளைப் போல இங்கு உடுக் கடித்து. உருவேற்றித் தெய்வம் வரச்செய்து காவியம் பாடிச் சடங்கு நடைபெறினும் வைரவர், அம்மன் ஆகிய தெய்வங்கள் வந்து ஆடினும் இங்கு முக்கியம் பெறுபவர்கள் பஞ்ச பாண்டவரும், திரௌபதியும், அவர்கள் நடத்தும் செயல்களுமே.

வனவாசம், தவநிலை, களப்பலி ஆகிய மூன்றும் முழுக்க முழுக்கச் சடங்குகளினிடையே நிகழ்த்திக் காட்டப்படும் நாடக அம்சம் நிரம்பிய சடங்குகள் என்றே நாம் கொள்ள வேண்டும்.

அவற்றை வெறும் நாடகம் ஆக்காமல் சடங்குகளுடன் இணைத்துள்ளமை இங்கு அவதானத்திற்குரியது.

பாண்டவரும், திரௌபதியும் எப்போதும் இந் நிகழ்ச்சிகளிற் பங்கு கொள்ளினும் வனவாசத்தில் தருமரும், வீமனும், தவநிலயில் தருமரும் அருச்சுனனும், களப்பலியில் தருமரும் திரௌபதியும் முக்கியமான பாத்திரங்களாக இருந்து இந்நாடகத்தினை நடத்திச் செல்வதைக் காணமுடிகிறது. கோயில் முன்றிலே மேடையாக அமைய இக்காட்சிகளில் மிகப் பெரும்பாலானவை மேடையாகிய அம் முன்றிலிலேயே நடைபெறுகின்றன.

நாம் முன்னர் பார்த்த சமயச் சடங்குகளில் ஆடலிற் பங்கு கொள்பவர் பாடுவதில்லை. (கட்டு மாத்திரமேகூறுவர்) ஆனால் இங்கு தெய்வ நிலையில் உருவேறி நிற்பவர்களும், சில சமயங்களில் மக்களால் வணங்கப்படுபவர்களுமான திரௌபதி, தருமர், அருச்சுனன், வீமன் ஆகிய தெய்வங்கள் முற்பட்டு ஆடும். ஆட்டக்காரரே பேசி, அபிநயித்து, இந்நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டுவர்

(தொடரும்)

# உலக நாடக தினமும் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகமும்



தமிழ் மொழிக்கு சிறப்புச் சேர்ப்பது இயல், இசை, நாடகம் ஆகும். இயல் தமிழ் இலக்கணத்துடன் கூடியது. இசை தமிழ் இசையுடன் இணைந்தது. நாடகம் தமிழ்க்கதை, கூத்து ஆகியவற்றுடன் இணைந்தது. நாடகக் கலைக்கு சிறப்பான இடம் மக்கள் மத்தியில் இருந்து வருவதைக் காணலாம். அரங்கிற்கும் மக்களுக்கும் இடையில் நெருக்கமான உறவு உள்ளது. மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினைகளை இனம் கண்டு அவர்கள் முன் கொண்டு சென்று மக்கள் மூலமாக தீர்வினைப் பெறச்செய்யும் கலை வடிவம்தான் நாடகம். இதனால்தான் நாடகம் ஒரு சமூகத்திற்கு உரித்துடைய கலையாக மட்டுமில்லாமல் அது சமூகத்தின் மனச்சாட்சியாகவும் செயற்படுகின்றது.

பொதுவாகவே அவைக்காற்றுகைக் கலைகள் கருத்துப் பரிமாற்ற ஆக்கத்திறனை கொண்டு வருவது பல குழுக்களுடன் ஆரோக்கியமான தொடர்புகளை ஏற்படுத்துவதுடன் படைப்பாளர்களின் கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தக் கூடிய வகையில் காணப்படுவதினால் ஆற்றுகைக் கலைகளுக்கு அன்று தொடக்கம் இன்று வரை மக்கள் மத்தியில் சிறப்பான ஒரு இடம் இருக்கின்றது. இவற்றுள் நாடகக் கலை மிக முக்கியமானது.
இக் கலையினை பெருமைப் படுத்தும் நோக்குடனே உலக நாடக தினம் கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் மார்ச் 27ம் திகதி உலக நாடக தினம் கொண்டாடப்படுகின்றது. நாடக தினம் எவ்வாறு கொண்டு வரப்பட்டது என்றால் 'சர்வதேச அரங்கப் பயிலகம்' என்ற அமைப்பு யுனெஸ்கோவுடன் இணைந்து உலகில் உள்ள முன்னணி அரங்க வல்லுநர்களால் ஆற்றுகைக் கலைத் துறையில் ஈடுபடு பவர்களின் படைப்பாற்றல் கலைகளை ஊக்கு விக்கும் முகமாக 1948ம் ஆண்டு பாரிசில் ஆரம்பிக்கப்பட்டது.

பாரிசில் தொடங்கிய (theatre of national) திருவிழாவை நினைவுகூரும் வகையில் அந்தத் தினத்தையே உலக அரங்க தினமாக கொண்டாட முடிவு செய்யப்பட்டது. அன்றைய தினத்தில் பாரம்பரிய கலைவடிவங்கள் அழியாது பாதுகாத்தல் என்பது மட்டுமன்றி அரங்கக் கலைகளை கௌரவப்படுத்தவும் அரங்கக் கலைகள் ஊடாக மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதுமாக இந்த உலக நாடக தினம் கொண்டு வரப்பட்டது. எனவேதான் உலக நாடக தினமானது எமது நாட்டிலும் சிறப்பான முறையில் பல ஆண்டுகளாக கொண்டாடப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கை நிறுவகத்திலும் சிறப்பான முறையில் ஒழுங்கு செய்யப்படுகின்றது. இந்த வருடம் உலக நாடக தினமானது மூன்று நாட்கள் கொண்டதாக நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதல் நாள் நிகழ்வாக தமிழரின் பாரம்பரிய கலை வடிவமான தப்பாட்டமும் அதனுடன் இணைந்ததாக புலியாட்டமும் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து விபுலானந்தரின் பிறந்த தின சிறப்பு நிகழ்வுகளும் அவரைப்பற்றியதுமான ஆய்வு கட்டுரைகளும் படிக்கப்பட்டதுடன் விபுலானந்தரின் ஆவணப்படமும் திரையிடப்பட்டது. இரண்டாம் நாள் நடைபெற்ற நாடக நிகழ்வுகளாக தமிழரின் மத்தியில் இருந்து வருகின்ற கதைச்சொல்லும் வடிவம் அழிவடைவதால் அதனை மீண்டும் புத்துயிர்ப்பு ஏற்டுத்தும் வகையில் கதைச்சொல் நிகழ்வாக வடிவமைக்கப்பட்டிருந்தது. மட்டக்களப்பில் கதை சொல்வதில் பெயர்பெற்ற கலைஞரான மாஸ்ரர் சிவலிங்கத்துடனான கலந்துரையாடலும் இடம்பெற்றதுடன் மாஸ்ரர் சிவலிங்கத்தினால் சொல்லப்பட்ட கதைகளை மாணவர்களினால் சொல்லும் பாங்கில் நிகழ்த்தப்பட்டதுடன் அவரை பின்பற்றி ஆய்வு கட்டுரைகளும் படிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மாஸ்டர் சிவலிங்கம் பற்றிய ஆவணப்படமும் திரையிடப்பட்டது. உலக நாடக தினத்தின் மூன்றாம் நாள் நிகழ்வாக நாடகத்துறை விரிவுரையாளர்களின் நாடகங்கள் அரங்கேற்றம் செய்யப்பட்டன. திரு. க. மோகனதாசன் அவர்களினால் 'எந்தையிழந்தோம் எமையிழந்தோம்' எனும் நாடகமும் திருமதி.உமாஸ்ரீசங்கர் அவர்களினால் 'மறத்தி" எனும் பெண்கள் வீரம் சொல்லும் நாடகமும் திருமதி கிருஸ்ணவேணி விவானந்தராசா அவர்களினால் 'இருத்த' என்னும் நாடகமும் திரு தி. தர்மலிங்கம் அவர்களின் 'அரங்க மொழி' என்னும் ஆற்றுகையும் செல்வன் சு.சஞ்ஜீவனின் அரிச்சந்திரன் மயான காண்டம் எனும் நாடகமும் செல்வி தி. சிறிரஞ்சினியின் 'மாறிலிகள்' எனும் நாடகமும் செல்வி சா.பிரியதஞ்சினி அவர்களின் நெறியாள்கையாக 'பாடல் அரங்கும்'; எனும் ஆற்றுகையும் ஆற்றுகை செய்யப்பட்டன.

**பொன்.சுரேந்திரன்**
**சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்கு பல்கலைக்கழகம்**

இவ்வாறு உலக நாடக தினமானது சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் ஒவ்வொரு வருடமும் சிறப்பான முறையில் கொண்டாடப்படுகின்றது. ஆயினும் இந்த வருடம் மூன்று நாட்களை கொண்டதாக நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நிகழ்த்தப்பட்டதுடன் ஆய்வுக்கட்டுரைகள், ஆளுமை மிக்க கலைஞர்களின் சந்திப்புக்கள், ஆவணப்படங்கள் திரையிடல் என பலவாறு நிகழ்வுகள் வடிவமைக்கப்பட்டு மூன்று நாட்கள் சிறப்பான முறையில் நடைபெற்று முடிந்தது.



# பட்டறிவு

## நமதுமலையகத்துக்கு ஜனாதிபதிவிருது ஒடுக்கப்பட்டவர்களின் குரலுக்குகிடைத்தமரியாதை,அங்கீகாரம்



(நமது மலையகம் இணையத்துக்கு ஜனாதிபதி விருது கிடைத்ததையிட்டு எமது அரங்கம் நிறுவனம் மகிழ்கிறது. சரவணனுக்கும், நமது மலையகத்துக்கும் எமது வாழ்த்துகள் -- ஆசிரியர்)

இவ்வருடத்திலிருந்து சிறந்த ஊடகத்துறையினருக்கான "ஜனாதிபதி ஊடக விருதை" அரசு வழங்கத் தொடங்கியுள்ளது. இந்த வருடம் சிறந்த வலைப்பதிவாளருக்கான விருது எனக்கு "நமது மலையகம்" இணையத்தளத்துக்காக கிடைத்துள்ளது. இது பற்றிய அனுபவப் பகிர்வை வாசகர்களோடு பகிந்துகொள்ள விரும்புகிறேன்.

மலையகம் பற்றிய செய்திகள், ஆய்வுக் கட்டுரைகள், அதற்கான தளமமைக்கும் ஊடகங்கள் எல்லாம் இன்று சற்று பெருகியுள்ளன. ஆனால் 10ஆண்டுகளுக்கு முன் வரை மலையகத்தில் என்ன நடக்கிறது என்பது பற்றி மற்றவர்களுக்கோ, சொந்த மக்களுக்கோ விழிப்பூட்டும் ஊடக மார்க்கங்கள் இருக்கவில்லை.

2000 ஆம் ஆண்டு சென்னையில் நிகழ்ந்த "தமிழ் இனி" மாநாட்டில் கலந்துகொண்டு அங்கு இது பற்றிய ஒரு கட்டுரையை சமர்ப்பித்தேன். குறிப்பாக வடக்கு கிழக்கில் போராட்டம் நடந்துகொண்டிருந்த காலப்பகுதியில் சர்வதேச அளவில் அப்போராட்டம் குறித்த பிரச்சாரத்துக்கென புகலிடத்தில் ஏராளமான ஊடகங்கள் கூட வளர்ந்திருந்தன. இணையத்தளங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி சேனல்கள் என ஒரு வளமான ஊடகங்களைக் கொண்டிருந்தார்கள். இத்தனை இருந்தும் கூட வடக்கில் நடக்கும் சிறிய செய்திகள் கூட பெரிய அளவில் கொண்டுபோக முடிந்தது. ஆனால் மலையகத்தில் நடக்கும் பெரிய விடயங்களைக் கூட சிறிய அளவிலாவது மக்களுக்கு கொண்டு போய் சேர்க்கும் அக்கறையோ, பிரக்ஞையோ அங்கு இருக்கவில்லை.

மலையகத்தின்பால் அக்கறை கொள்வதற்கும், அவர்களுக்காக குரல் கொடுக்கவும், ஆதரவு வழங்கவும் புகலிடத்தில் கணிசமான சக்திகள் இருந்தபோதும் அவர்களுக்கு மலையகம் பற்றிய எந்தச் செய்திகளும் உரியவகையில் கொண்டு செல்லப்படாதால் மலையக மக்கள் ஒரு வகையில் அனாதைகளாகவே தொடர்ந்தும் இருந்தார்கள்.

இலங்கையில் 1948இல் தமிழரசுக் கட்சியின் தோற்றக் காலத்திலிருந்தே மலையகம் அவர்களின் நிகழ்ச்சிநிரலில் பிரதான இடத்தைப் பிடித்திருந்தது. மலையகத்துக்கான மாநாட்டுத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தமிழ்த் தேசிய அரசியலின் வளர்ச்சிக்கும் மலையகப் பிரச்சினை முக்கிய இடத்தை வகித்திருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினையை தொகுத்து பேசும்போது மலையக மக்களின் பிரச்சினை முக்கிய இடத்தை வகித்திருக்கின்றன. ஆயுதப்போராட்ட காலத்தில் நிகழ்ந்த முக்கிய பேச்சுவார்த்தைகளில் குறிப்பாக திம்பு பேச்சுவார்த்தை, இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்பவற்றில் கூட இந்திய வம்சாவளியினரின் பிரச்சினை ஒரு அங்கமாக இருந்திருக்கிறது. 80 களுக்குப் பின் மலையகம் ஈழப் போராட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் இருந்து கழற்றிவிடப்பட்டுவிட்டது என்று தான் கூற வேண்டும்.

1939 இல் இலங்கையில் முதலாவது சிங்கள - தமிழ் இனக்கலவரம் மலையகத்தில் ஏற்பட்டது. ஜி.ஜி.பொன்னம்பலம் மலையகத்தில் வந்து மகாவம்சத்துக்கு எதிராக பேசியது அந்தக் கலவரத்துக்கு உடனடிக் காரணமாக அமைந்தது. அதன் பின்னர் இலங்கையில் நிகழ்ந்த அத்தனை கலவரங்களிலும் அதிகமாக பாதிக்கப்பட்டது மலையகமும் இந்திய வம்சாவளி மக்களுமே என்பது யாவருக்கும் தெரியும். வடக்கு - கிழக்கு தமிழ்த் தேசிய அரசியலால் சிங்களப் பேரினவாதம் கடுப்பேறும் காலங்களிலெல்லாம் மலையக மக்களே தாக்குதலுக்கு ஆளானார்கள். அகதிகளானார்கள். இறுதியில் அரசியல் அனாதைக்களுமானார்கள். ஏற்கனவே இலங்கை அரசால் திட்டமிட்டு நாடுகடத்தும் கைங்கரியத்தால் வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்ட காலம் போய் ஒவ்வொரு கலவரத்தின் பின்பும் இருந்த கொஞ்ச சொத்துக்களையும் இழந்து, நம்பிக்கையும் இழந்து கூட்டம் கூட்டமாக தமிழகம் போய் சேர்ந்தார்கள். வடக்கே பாதுகாப்பு என்று நம்பி அங்கும் சென்று குடியேறினார்கள். ஈழ விடுதலைப் போராட்டத்தில் இணைஈந்து ஏறத்தாழ அத்தனை இயக்கங்களின் மூலமாகவும் தமது உயிரைக் கொடுத்திருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் தமிழ்த்தேசிய அரசியலில் பிரிக்க முடியாத அங்கமாக இருந்த மலையக மக்கள் அதிலிருந்து துண்டிக்கப்பட்டதன் அரசியலை ஒரு முறை திரும்பிப் பார்க்க வேண்டும்.




மலையகம் பற்றிய செய்திகள்

**என்.சரவணன்**

குறைந்தபட்சம் வெளிவந்தால் தான் அந்த தகவல்களும், தரவுகளும், நிகழ்வுகளும் மலையகத் தேசியத்துக்கான கருத்தாக்கத்துக்கு கருத்துருவம் கொடுக்க முடியும். எனவே வடக்கு சமூகத்திலிருந்து இதற்கான ஆதரவைத் தேடாமல் நாமே நமக்கான ஊடகங்களை உருவாக்கிக்கொள்ள முனைவோம் என்றுதான் நாங்கள் பரவலாக பிரச்சாரம் செய்யத் தொடங்கினோம்.

"Malayagam.com" என்கிற இணையப்பெயரை 2002 ஆம் ஆண்டு நான் வாங்கி அதனை நடத்துவதற்காக மலையகத்தோடு தொடர்புடைய நண்பர்களை அணுகினேன். அது வெற்றியளிக்கவில்லை கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக அந்த இணையத்தளம் பறிபோகாமல் இருப்பதற்காக பணத்தைக் கட்டிக்கொண்டே இருந்தேன். ஒரு வருடம் அக்கட்டணத்தை கட்ட தவறியதால் அது பறிபோனது ஒரிரு வாரங்களுக்குள்ளேயே யாரோ ஒருவர் அதனை வாங்கிவைத்துக்கொண்டார். ஆனால் நான் www.malayagam.net என்கிற ஒரு இணையப்பெயரை மீண்டும் வாங்கினேன்.

10 ஆண்டுகளுக்குப் பின் நான் 2012 இல் மீண்டும் இலங்கை செல்லும் வாய்ப்பைப் பெற்றேன். மலையகத்துக்கான ஒரு இணையத்தளத்தின் அவசியத்தைப் பற்றி பல நண்பர்களுடன் பேசினேன். நோர்வே திரும்பியதும் 12.12.2012 அன்று சரியாக நள்ளிரவு 12 மணிக்கு நோர்வேயில் அசோக், ரஜினி, ரமேஸ், அரவிந்த் ஆகிய இந்தியவம்சாவளி நண்பர்கள் இணைந்து முதல் தடவையாக மலையகம் இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்தோம். இங்கு இருந்த நண்பர்கள் அந்த இணையத்தளத்தில் தொழில்நுட்ப ரீதியில் ஒத்துழைக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை. இந்த இடைக்காலத்தில் எனது நெருங்கிய தோழர்களான லெனின் மதிவானம், தோழர் திலக் (இப்போது பாராளுமன்ற உறுப்பினர்) ஆகியோருடன் இது குறித்து தொடர்ந்து கலந்துரையாடினோம். ஒரு அணியாக உருவானோம். ஆனால் தோழர் லெனின் மதிவானம் அந்தப் பெயரை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தார். நான் விளக்கியும் கூட அவர் தனது அபிப்பிராயத்தில் கெட்டியாக இருந்ததால் அவரின் விருப்பப்படியே "நமது மலையகம்" என்கிற புதிய பெயருக்கு இணையத்தளத்தை மாற்றிக்கொண்டேன்.

2013 இலங்கை சென்று நமது மலையகத்தின் அறிமுக நிகழ்வை யூலை 28அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்தினோம். இதனை நடத்துவதில் தோழர் லெனின், திலக் , ஜெயக்குமார் போன்றோர் பெரும்பங்கு வகித்தார்கள். பேராசிரியர் சந்திரசேகரன், தெளிவத்தை ஜோசப், ஏ, லோரன்ஸ், லெனின், திலக் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இணையத்தளத்தை உருவாக்கினால் போதாது அதனை தொடர்ந்து நடத்தவேண்டும் அதற்காகத்தான் ஒரு அணி தேவைப்பட்டது. சக தோழர்களின் வேலைப்பங்கீடு, பங்களிப்புடன் அது நிறைவேறும் என்கிற நம்பிக்கையுடன் தான் தொடங்கினோம். ஆனால் வேலைப்பங்கீடு சாத்தியப்படவில்லை.

இதற்கிடையில் பல சவால்கள். இணையத்தளத்தை நடத்துவதில் நான் தனித்து நின்றேன். இனியும் இதனை விடுவதில்லை எப்பேர்ப்பட்டும் இதனை விடாது தொடர்வேன் என்று எனக்கும் உறுதிமொழி எடுத்துக்கொண்டேன். நான் செய்ய வேண்டிய எனது ஆய்வுப் பணிகளுக்கான நேரத்தையும், உழைப்பையும், சக்தியையும் நமது மலையகம் இணையத்தளத்துக்கான தொழிநுட்ப பணிகள் உறிஞ்சிக் கொண்டன. இலங்கையில் ஆங்காங்கு ஊடக பயிற்சிநெறிகளை நடத்தினேன். அதில் எம்மோடு இணைந்து தொண்டர்களாக இதன் ஆசிரியர்களாக பணியாற்றும்படியும் பலரைக் கேட்டுக்கொண்டேன். சிலர் இணைந்தார்கள். பயிற்சியளித்தேன். சில வாரங்களில் அவர்களும் அமைதியானார்கள்.

எம்மோடு பணிபுரிய முன்வந்தவர்களிடம் இந்த இணையத்தளத்துக்கு நோர்வே நிதியுதவி செய்வதாக ஒரு புரளியையும் சில நல்ல உள்ளங்கள் கிளப்பிவிட்டார்கள். இது முற்றியும் எனது சொந்த செலவில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நிரூபிக்க படாதுபாடுபட்டேன். உழைப்பு சக்தி, நேரம், வளங்கள் என அத்தனையும் கொடுத்ததும் என் பிரக்ஞை பற்றிய அவதூறு செய்தவர்களிடம் இருந்து விலகி இருக்கத் தான் முடிந்தது.

நமது மலையகம் இணையத்தளம் எந்த வணிக விளம்பரங்களையும் செய்து வருமானம் உழைக்கவில்லை. கூகிள் விளம்பரங்களை செய்யும்படி சிலர் கேட்டுக்கொண்டும் தவிர்த்தோம். நமது கொள்கைகளை மீறிய விளம்பரங்கள் வந்தால் அறமீறலாக அமைந்துவிடும் என தவிர்த்துவிட்டோம்.

இது ஒடுக்கப்படும் மக்களின் இணையத்தளம். அறம் சார்ந்து மிகவும் எச்சரிக்கையுடன் இருந்துவருகிறோம். மலையகத்துக்கான செய்தித்தளங்கள் சில இன்று உருவாகியிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. செய்திகளுக்காக நாங்கள் இயங்க வேண்டும் என்கிற அவசியம் இப்போது இல்லை. அதற்கான கொள்ளளவும் எம்மிடம் இப்போதைக்கு இல்லை. செய்யப்படாத பணிகள் இருந்தால் அதனை செய்கிறோம். குறிப்பாக நல்ல ஆக்கங்கள் வேறு இடங்களில் வெளிவந்தால் அதனை மீள பதிவு செய்து மேலும் பலரிடம் கொண்டு போய்ச் சேர்க்கிறோம். இணையத்தளத்தின் ரேட் கருதி மலையகம் சாராத முக்கிய படைப்புகளையும், ஆய்வுகளையும் வெளியிட்டுவருகிறோம். குறிப்பாக எனது கட்டுரைகள் அனைத்தையும்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# விளையாட்டு



## மாணவிகளுக்கு கால்பந்துப் பயிற்சி

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மட்டக்களப்பு வருகையை முன்னிட்டு "கிரிடா சக்தி" திட்டத்தின் கீழ் மட்டக்களப்பின் சிறந்த மகளிர் கால்பந்து அணிகளுக்கான பயிற்சி முகாம் ஒன்று புதனன்று அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டன.

கால்பந்து மாத்திரமன்றி கைப்பந்து விளையாட்டுக்கான பயிற்சிகளும் அங்கு தேசிய அணிகளுக்கான பயிற்றுவிப்பாளர்கள் மூலம் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகமும் அதன்



பன்சேனை பாரி வித்தியாலயம், அம்பிளாந்துறை கலைமகள் மகாவித்தியாலயம் மற்றும் கடுக்காமுனை பாடசாலை ஆகிய பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த அணிகள்

விளையாட்டுத்துறை அதிகாரிகளும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். கொழும்பில் இருந்து விளையாட்டு அமைச்சின் உயர் அதிகாரிகளும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

## அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட வேக பந்துவீச்சாளர் தேர்விலும் அஜித்குமார் சிறந்த பந்து வீச்சாளராக தெரிவு.!



காரைதீவு சகா

நாடு பூராகவும் நடாத்தப்பட்டுவரும் கடின பந்து வீரர்கள் தேர்வில் கடந்த ஒரு மாதத்திற்கு முன் கிழக்கு மாகாண வீரர்களுக்கு நடாத்தப்பட்ட தேர்வில்

வேக பந்து வீச்சில் அகில இலங்கை தேர்வு முகாமிற்கு தகுதி பெற்ற காரைதீவு விளையாட்டுக்கழக அணியை பிரதிநித்துவப்படுத்தும் பந்துவீச்சாளர் கே.அஜித்குமார், அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட தேர்வு முகாமில் தமது திறமையை வெளிப்படுத்தி சிறந்த வேகப்பந்து வீச்சாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் 115 கிலோமீற்றர் மணித்தியலாயம் வேகத்தில் வீசி தேசிய பயிற்சி குழாமிலும் இடம் பிடித்துள்ளார். அதிலும் இவர் தெரிவாகும் பட்சத்தில் இலங்கை தேசிய அணி வீரர்கள் பட்டியலில் இடம்பிடிப்பதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளன.

## கொல்லனுலைப் பாடசாலையில் யோகாசன நிகழ்வு



(படுவான்கரை நிருபர்)

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற் கிணங்க, மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லனுலை விவேகானந்த வித்தியாலயத்தில் யோகாசன நிகழ்ச்சி கடந்த (10) புதன்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் சா.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன், கணக்காளர் ஏ.சிவகுமார், கோட்டக்கல்விப் பணிப்பாளர்களான முருகேசபிள்ளை, ந.தயாசீலன் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மாணவர்கள் யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபட்டதுடன், யோகாசனம் தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்தனர். மேலும் குழுமுறையிலான யோகாசன காட்சிகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

## தேசிய மட்டத்திற்கு கோட்டைமுனை பூப்பந்தாட்ட அணி....



(ஜெயா)

மாகாண மட்டத்திலான பெண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டியில் மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் பெண்கள் பூப்பந்தாட்ட அணி வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிகளில் விளையாட தகுதி பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வெபர் மைதான உள்ளக



அரங்கில் புதனன்று நடைபெற்ற மாகாண மட்டத்திலான பெண்கள் பூப்பந்தாட்ட போட்டியில் கோட்டைமுனை விளையாட்டு கழகம் வெற்றிபெற்று தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொண்ட வீராங்கனைகளுக்கும் அவர்களை பயிற்றுவித்த கிருசாந்தி நிமலன் அவர்களுக்கும் இவர்களுடன் செயற்பட்ட கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் விளையாட்டு பிரிவுக்கு பொறுப்பாக செயற்படும் திரு.ராஜாஜி மற்றும் திரு. பகீரதன் ஆகியோருக்கு கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் தலைவர் திரு. சடாற்சரராஜா தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு தம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதாக கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் நம்பிக்கையாளர் சபையின் பிரதிநிதியாகிய திரு.ரஞ்சன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 31

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

சில கட்டுரைகளின் முகவுரைகள் இங்கு தரப்பட்டுள்ளன. அவற்றை வாசிப்பதற்கு முன்னர், அக்கட்டுரைத் தலைப்புக்களுக்கு ஏற்ப நீங்கள் முகவுரைகளை எழுதிய பின்னர் தரப்பட்டுள்ள முகவுரைகளை வாசித்து, உங்கள் முகவுரைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அவ்வாறு செய்வதன்மூலம் உங்களை வளர்த்துக்கொள்ளலாம். மேலும் இங்குள்ள முகவுரையின் சொல்லளவு வேறுபட்டுள்ளது. அது, கட்டுரைத் தலைப்புக்கு ஏற்பவும் ஆளுமைக்கு ஏற்பவும் மாறுபடலாம்.

### புதுமைகளும் மாறுதல்களும்

ஒரு பண்பாடோ சமயமோ நிறுவனமோ நிலைத்திருக்க வேண்டுமாயின், காலத்துக்குக் காலம் தோன்றும் மாறுதல்களுக்கும் தேவைகளுக்கும் முகங்கொடுக்கும் ஆற்றல் பெற்றதாய் அது இருத்தல் வேண்டும். பழைய பெருமைகளிலும் சாதனைகளிலும் தன்னை இழந்துவிடாது பழையவற்றுள் உதவாதவற்றை ஒதுக்கிவிட்டு உகந்தவற்றைப் பேணிக்கொள்ளத் தயாராயிருத்தல் வேண்டும். முன்னைய காலங்களில் ஈட்டிய அனுபவங்களைத் துணையாகக் கௌ்வதோடு, எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டிய புதிய முயற்சிகளிலும் முனைந்து நிற்கவேண்டும். பழையதைச் சற்றும் விடாமலும் புதியதை முற்றும் வேண்டாமலும் இருத்தல் சாத்தியமன்று. அந்த வகையில், பழையன கழிதலும் புதியன புகுதலும் பற்றி எண்ணிப்பார்த்தல் பயனுடையதாகும்.

- பேராசிரியர் சி. தில்லைநாதன்

### மொழியியலும் துறைகளும்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மேலை நாடுகளில் வளர்ந்துவரும் ஒரு துறை, மொழியியலாகும். மொழியியல் ஆய்வுகள் மொழித் துறையினருக்கு மட்டுமன்றித் தருக்கவியலாளர், உளவியலாளர், சமூகவியலாளர், மானிடவியலாளர் முதலிய பலருக்கும் பயன்படுகின்றன. இவ்வாறு இக்கால மொழியியல் தனிநிலையிலும் பிற துறைகளுக்கு உதவும் நிலையிலும் வியத்தகு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது.

கு. பரமசிவம்

### இலட்சகோடி சூரியர்கள்

நம்மிற் பலர் மார்கழி மாதத்தில் அதிகாலையில், சூரிய உதயத்திற்கு முன் நித்திரை விட்டெழுந்து அனுபவப்பட்டிருப்போம். கோழிகள் கூவுவதற்குச் சற்று முன் எழுந்திருப்போமானால், நமது வீட்டுப்படியை விட்டு இறங்குவதற்கே மிகவும் பயமாய் இருக்கும். எங்கும் ஒரே இருள்மயமாகவே இருக்கும். திக்குத் திசை அறிவதே மிகவும் சிரமமாய் இருக்கும். சற்று நேரம் சென்றபின் ஒருவகையாக வானம் வெளுக்கும். எத்திசையில் அது முதல் வெளுக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? இந்த நேரத்தில் பறவைகளும் விலங்குகளும் பெரும் ஆரவாரத்துடன் பெரிய ஒரு சக்கரவர்த்தியை வரவேற்பது போலக் குதூகலத்துடன் "பள்ளியெழுச்சி" பாடும். அவை பெரிய அபாயத்திருந்து தப்பி, வெளியேறியன போலக் காட்சியளிக்கும். சூரியனின் கதிர்கள் வானத்திலே தோன்றவும், காலைக்காட்சி கண்களுக்கு எவ்வளவு அழகாகவும் ஆனந்தமாகவும் இருக்குமென்று கண்கள் உள்ளவர்களுக்குச் சொல்லியா தெரிய வேண்டும்? மறைந்து கிடந்த மலர்களின் வர்ணங்களும் பயந்து பதுங்கியிருந்த புள்ளினங்களின் கீதங்களும் யாரைத்தான் பரவசமடையத் தூண்டா?

வே. சிவகுரு

### உவமையும் உருவகமும்

கவிதையிலே சாதாரணமான சொற்கள் அசாதாரணமான ஆற்றலைப் பெற்று விளங்குகின்றன என்று கூறுவர். அவ்வாறாயின் அது சாத்தியமானதற்குச் சில உத்திகள் அவசியமாயுள்ளன. கவிஞன் கையாளும் இவ்விசேடமான உத்திகளுள் ஒன்று, உவமையாகும். உவமை என்பது ஒரு பொருளைப் பிறிதொரு பொருளுக்கு ஒப்பிட்டுக் கூறுதல். இருவேறுபட்ட பொருள்களை ஒப்புநோக்கிக் காட்டுவதன் மூலம், சம்பந்தப்பட்ட சொற்களின் பொருளாற்றலை அதிகப்படுத்துகிறான் கவிஞன். உவமையும் உருவகமும் ஒரே அடிப்படையிலிருந்து தோன்றுவன.

கைலாசபதி – முருகையன்

### கேலிச் சித்திரங்கள்

கேலிச் சித்திரம் ஒரு கலை வடிவம். நுட்பமான கலை அம்சங்களைக் கொண்டது. இக்கலை வடிவத்தின் சிறப்பான தன்மை, அதற்கு மொழி பேதமோ எழுத்தறிவு பேதமோ இல்லாமையாகும். கேலிச் சித்திரங்களை ஆக்குவதற்குத் தனித்துவமான திறமை தேவைப்படினும் அவற்றைப் பார்த்து இரசிப்பதற்கோ விளங்கிக்கொள்வதற்கோ மொழியறிவு தேவையில்லை. ஒரு மொழியில் எழுதிய விடயமொன்றை அந்த மொழி தெரிந்தவர்களால் மட்டுமே வாசித்துக் கிரகிக்க முடியும். ஆனால் கேலிச் சித்திரங்களை எந்த மொழி பேசுபவர்களும் விளங்கிக்கொள்ள முடியும்.

பூ. சுப்பிரமணியன்

# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

53. புரதங்களின் இயல்புமாற்றமடைதல் (Denaturation of proteins) என்றால் என்ன?
வலுவற்ற இரசாயனப் பிணைப்புகளின் மாற்றத்தினாலும் இடைத்தாக்கங்களினாலும் தனித்துவமான முப்பரிமாண வடிவத்தை இழத்தல் புரதங்களின் இயல்பு மாற்றமடைதல் எனப்படும்.

54. புரதங்களின் இயல்பு மாற்றமடைதலைப் பாதிக்கும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
    1) உயர் வெப்பநிலையும் உயர் சக்திக் கதிர்வீசலும்.
    2) வன் அமிலங்கள், காரங்கள் மற்றும் உப்புக்களின் உயர் செறிவுகள்.
    3) பாரமான உலோகங்கள்
    4) சேதனக் கரைப்பான்களும் கழுவிகளும் (detergents).

55. தொழிற்பாட்டு ரீதியில் புரதங்களைப் வகைப்படுத்தி, அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணத்தைத் தந்து, நீர் குறிப்பிடும் உதாரணத்தினால் மேற்கொள்ளப்படும் ஓர் தொழிலையும் குறிப்பிட்டு ஒரு அட்டவணை தயாரிக்க.

புரதங்களின் தொழில்கள்

| புரதத்தின் வகை | உதாரணம் | தொழில் |
|---|---|---|
| ஊக்கிப்புரதங்கள் | பெப்சின், அமைலேசு | உயிரிரசாயனத் தாக்கத்தை ஊக்குவிக்கின்றன. |
| கட்டமைப்பிற்குரிய புரதங்கள் | கெரற்றின் | உலர்தலைத் தடுக்கின்றது. |
| | கொலாஜன் | உறுதியையும் ஆதாரத்தையும் வழங்குகின்றது. |
| சேமிப்புப் புரதம் | ஒவல்பியுமின் | முட்டையில் சேமிப்புப்புரதம் |
| | கேசீன் | பாலில் சேமிப்புப் புரதம் |
| கடத்தல் புரதம் | ஈமோகுளோபின் | $O_2$ மற்றும் $CO_2$ கடத்தல் |
| | நீர்ப்பாய அல்புமின் | கொழுப்பமிலங்களைக் கடத்தல் |
| ஓமோன்கள் | இன்சுலின்<br>குளுக்காகன் | குருதிக் குளுக்கோஸ் மட்டத்தைச் சீராக்குகிறது |
| சுருங்கத்தக்க / இயக்கப் புரதம் | அக்டின் / மயோசின் | தசைநார்களின் சுருக்கம் |
| பாதுகாப்புக்குரிய புரதம் | இமியுனோகுளோபின்கள் | அந்நிய பொருட்களை அகற்றுதல். |

56. நியூக்கிளிக் அமிலங்கள் (Nucleic acids)
    - நியூக்கிளிக் அமிலங்களாவன உயிர்க் கலங்களில் பாரம்பரியத்துக்குரிய செய்திகளைக் காவுகின்றதும் நியூக்கிளியோடைட்டுக்கள் என அழைக்கப்படும் ஒருபாத்துக்களால் ஆக்கப்பட்டதுமான பல்நியூக்கிளியோடைட்டுக்கள் ஆகும்.
    - அவை C,H,O,N மற்றும் P ஆகியவற்றைக் கொண்டவை.
    - நியூக்கிளிக் அமிலங்கள் மாமூலக்கூறுகளும், உயிரியல் பல்பகுதியங்களும் ஆகும்.
    - இரண்டு வகையான நியூக்கிளிக் அமிலங்கள் உள்ளன. DNA (டீஒட்சிறைபோ நியூக்கிளிக் அமிலங்கள்) மற்றும் RNA (இறைபோநியூக்கிளிக் அமிலங்கள்) ஆகியன

57. நியூக்கிளியோடைட்டுக்களின் கட்டமைப்பு அம்சங்களைக் குறிப்பிடுக.
    - நியூக்கிளியோடைட்டுக்கள் மூன்று கூறுகளை உடையன.
    - அவையாவன, பெந்தோஸ் வெல்லம், நைதரசன் மூலம் மற்றும் ஒரு பொஸ்பேற் கூட்டம் ஆகும்.




நியூக்கிளியோடைட்டுக்களின் கட்டமைப்பு
(இரசாயனக் கட்டமைப்புக்களை மனனம் செய்யத்தேவையில்லை)

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

தொடர்ச்சி...

## சர்வசன வாக்குரிமையும் வாக்காளர்களும்

ஒரு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதி ஒருவர் அந்த மாவட்டத்து மக்களின் பிரதிநிதியாகின்றார். அவருக்கு குறைந்தபட்ச கல்வித்தகுதியாவது இருப்பதோடு கூடியபட்ச அரசியல் அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அந்த வேட்பாளர் தெரிவால் அந்த மக்களும் பெருமை கொள்ளலாம். அதைவிடுத்து சொந்தக்காரர், ஊரவர், சாவீட்டுக்கு வருபவர் எனும் தகுதிப்பாடுகளை மாத்திரம் கவனத்தில் கொண்டு வேட்பாளரை மக்கள், பிரதிநிதியாகத் தெரிவுசெய்கின்ற போது அந்த மக்களின் சனநாயகப் பொறுப்பு கேள்விக்குரியதாகின்றது. அவ்வாறானவர்களின் அரசியல் பேட்டிகளை தொலைக்காட்சிகளில் பார்க்கும் போது அவர்கள் அளிக்கும் பதில்களும் அவர்களின் உடல் மொழியும் எம்மை வெட்கத்துக்குள்ளாக்கி சங்கடப்படவைக்கின்றன.

இலங்கையின் சனநாயகம், அபிவிருத்தி, சமூகப்பொறுப்பு, என்பவை பற்றிச் சிந்திக்காமல் இனவாதத்தினையும் மதவாதத்தினையும் பிரதேசவாதத்தினையும் வளர்த்தெடுப்பவர்களாகவே எமது வாக்காளப்பெருமக்கள் இருந்துவந்துள்ளனர் என்பதை கடந்தகால அரசியல் வரலாறு முழுக்கக் காணலாம். இதுதான் சேர். பொன்.இராமநாதன் படித்தவர்களிடத்தில் இருந்து எதிர்பார்த்த பொறுப்புள்ள வாக்குப்பயன்பாடாக இருக்கின்றது. இப்ப சொல்லுங்கோ இராமநாதன் தனது வாதத்தின் தவறினைக் கண்டு வெட்கப்பட்டிருப்பாரா? இல்லையா?

எதிர்காலத்தில் எமது வாக்காளர்கள் இவற்றிலிருந்து மீண்டு ஆளுமையும் அறிவும் அரசியல் ஞானமும் சனநாயகப் பண்பும், மனிதத்துவத்தை மதிக்கின்ற உணர்வும் இலங்கையின் பல்லினப் பண்பாட்டையும் சமூகத்தையும் மதிக்கின்றவர்களை தெரிவுசெய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றதா எனப்பார்க்கின்றபோது அதுவும் வெற்றிடமாகவே தெரிகின்றது. இங்குள்ள கட்சிகளெல்லாம் இனத்தையும் மதத்தையும் அடிப்படையாகக் கொண்ட கட்சிகளாகவே இருக்கின்றன. தேசியக் கட்சிகளாக தம்மை அடையாளப்படுத்துகின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றிலும் இனவாதமும் மதவாதமுமே கோலோச்சுகின்றது. ஒரு கட்சி தமிழர்களுக்கான தீர்வை முன்வைக்கும் போது அடுத்த கட்சி அதை எதிர்ப்பதும், அடுத்த முறை எதிர்த்த கட்சி தீர்வை முன்வைக்கும் போது முன்பு தீர்வை முன்வைத்த கட்சி எதிர்ப்பதுமாக மாறி மாறி நாடகம் நடத்திக் கொண்டிருப்பதற்கும் காரணம் இக்கட்சிகள் கொண்டிருக்கின்ற இனவாத நிலைப்பாடுகளினாலாகும். இவ்விரு கட்சிகளுமே இலங்கையில் இனவாதத்தினை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றிய கட்சிகளுமாகும்.

எனவே எமது வாக்காளர்களுக்கிருக்கின்ற கல்வியினால் தமது வாக்குகளைப் பயன்படுத்தி இலங்கையில் புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்கக் கூடிய வேட்பாளர்களை எதிர்வரும் தேர்தல்களில் தெரிவு செய்ய வேண்டுமேயொழிய ஏற்கனவே கூறியது போல இனவாத,மதவாத,பிரதேசவாத, சாவீட்டு அரசியல் வாதிகளையும் ஆளுமையற்றவர்களையும் செயல்திறனற்றவர்களையும் ஒதுக்கித் தள்ளி விடல் வேண்டும். அதுதான் இந்த வாக்காளர்களின் கல்விக்கு அவர்கள் அளிக்கும் கௌரவமாகும்.

தொடர்ச்சி...

## நமதுமலையகத்துக்கு...

அதிலேயே வெளியிடுகிறேன். சாதியத்துக்கு எதிராக வெளிவந்த சில கட்டுரைகள் முகநூலில் ஆதிக்க தரப்பினர் முறைப்பாடுகளை செய்ததன் விளைவாக முகநூலில் கடந்த வாரம் நமது மலையகத்தின் சகல இணைப்புகளும் தடை செய்யப்பட்டிருந்தன. பின்னர் உரிய விளக்கங்களை அளித்து மீள இயங்கத் தொடங்கியிருக்கிறது. இன்று கூகிளில் "மலையகம்' என்று தேடினால் முதன்மை இடம் பிடிக்கும் இணையத்தளமாக கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம்

இது ஒடுக்கப்பட்டவர்களுக்கான இணையத்தளம். "குரலற்றோருக்கான குரல்" சகல ஒடுக்குமுறைகளையும் பாரபட்சமின்றி எதிர்ப்போம், விப்புணர்வூட்டுவோம், கருத்துருவாக்குவோம்.

"நமது மலையகம்" இணையத்தளத்துக்கு கிடைத்த "ஜனாதிபதி தேசிய விருது" ஒடுக்கப்பட்டவர்களின் குரலுக்கு கிடைத்த மரியாதை, அங்கீகாரம்.

தொடர்ச்சி...

## மருத்துவத் தவறுகள்

சத்திரசிகிச்சை என்றாலும், மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர் இல்லை என்பதற்காக யாழ்ப்பாணம் அனுப்பியாகவேண்டும். சில நோயாளிகளின் நிலைமையைப்பார்க்க கவலைதான் வரும், அவரை யாழ்ப்பாணம் அனுப்பினால், உறவினர்கள் போய்பார்க்க பஸ்காசுக்கு கூட வழியில்லாதவர்கள், இங்கேயே சத்திரசிகிச்சை செய்துவிடுங்கள் என்று கெஞ்சுவதுமுண்டு. இருந்தாலும், உரிய மருத்துவ நிபுணர் இல்லாமல் ரிஸ்க் எடுத்து ஒரு நோயாளியை இறக்கவிட ஏலாதுதானே?

அண்மையில் இப்படி ஒரு நோயாளி கெஞ்சினார். சரி, விறைப்பூசி மட்டும் போட்டு சத்திரசிகிச்சை செய்ய முயற்சி செய்கிறேன், முடியாமல் மயக்கமருந்து கொடுக்கவேண்டி வந்தால், கட்டாயம் யாழ்ப்பாணம் அனுப்பவேண்டிவரும் என்று சொல்லிவிட்டுத்தான் சத்திர சிகிச்சைகூடத்துக்கு அவரை எடுத்தேன். விறைப்பூசி மட்டும் போட்டு செய்யமுடியாதுபோக, அடுத்தநாள் யாழ்ப்பாணம் அனுப்புகிறேன் என்று நானே மினக்கெட்டு விளங்கப்படுத்தினேன். அடுத்த நாள் நான் விடுதிக்குப்போகும்போது, அந்த நோயாளியின் உறவினர் ஒருவர் தொலைபேசியில் `` நேற்று ஒப்பரேசன் செய்தவங்க, ஏதோ பிரச்சினை ஆகிட்டாம், யாழ்ப்பாணம் ஏத்துறாங்க உடனே வாங்க` என்று சொல்லிக்கொண்டிருந்தார். `பிழையாக ஒப்பரேசன் செய்த பருத்தித்துறை வைத்தியர், ஒப்பரேசன் தியேட்டருக்குள் ஆச்சிக்கு செய்தது என்ன?` என்று பேஸ்புக்கில் செய்தி வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன், நல்லகாலம் வரவில்லை.

இவை சில நடமுறைச் சிக்கல்கள்.

மருத்துவத்தவறுகள், அதனால் நோயாளிகள் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் பற்றி அடுத்த பாகத்தில் விளக்குகிறேன்.

தொடர்ச்சி...

## பெண்ணின் பாதுகாப்பை ...

உங்கள் குழந்தை ஒரு குறிப்பிட்ட பக்குவப்பட்ட வயதை அடைந்தவுடன் அவர்களிடம் பாலியல் சம்பந்தப்பட்ட விடயங்களை பேசுங்கள். இதில் தயக்கம் காட்டவோ பேசுவது நாகரிகமற்றது என்று நினைக்கவோ எதுவுமில்லை. உங்கள் குழந்தையை நீங்கள் தான் சரியான பாதையில் வழிநடத்த வேண்டும்.

இன்று முறையற்ற வழியில் குழந்தைகள் பிறப்பதற்கு ஒரு காரணம் பெண்களிடம் பாலியல் கல்வி தொடர்பான அறிவின்மை ஆகும். அத்துடன் பெரும்பாலான கருக்கலைப்புக்களுக்கும் அதுவே காரணமாக உள்ளது. பெண்பிள்ளைகளிடம் அவர்களின் ஆண் நண்பர்களை பற்றி கலந்துரையாடுவது மிகவும் அவசியமான ஒன்று.

அவர்கள் எப்படியான நண்பர்களுடன் பழகுகிறார்கள் என்பதை பெற்றோர் நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

உங்கள் பிள்ளைகளிடம் நட்பாக பழகுங்கள் அவர்களது கைத்தொலைபேசியை கண்காணித்து கொள்ளுங்கள். யாருடன் பேசுகிறார்கள் எங்கு சென்று வருகிறார்கள் என்பதை தினமும் அவதானித்து கொள்ளுங்கள்.

அதிகமாக வன்முறையான கட்டுப்பாடுகளை விதிக்காதீர்கள், அதுவே அவர்களை பிழையான வழியில் கொண்டு செல்லும். ஆகவே பக்குவமாக பேசுங்கள், இவ்வளவு நேரம் தான் நீ வெளியில் இருக்கலாம் இவ்வளவு நேரம் வரை தான் தொலைபேசி பாவிக்கலாம் என்பதை கூறி அதில் உள்ள நன்மை தீமைகளை எடுத்து கூறுங்கள்.

இவற்றை எல்லாம் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு சிறு வயதிலிருந்தே பழக்க வேண்டும். பருவ வயதில் திடீரென்று அவர்களை மாற்ற முயன்றால் அது தவறான விளைவுகளை தான் ஏற்படுத்தும்.

பெண்பிள்ளைகள் ஒவ்வொரு நாளும் வெளியில் தமக்கு நடந்த நன்மை தீமை அனைத்தையும் மறைக்காமல் தயங்காமல் தாயிடம் சொல்ல வேண்டும். அப்படி ஒரு மனநிலையை உங்கள் பிள்ளைக்கு உருவாக்குவது ஒவ்வொரு தாயின் கடமை. உங்கள் பிள்ளை உங்களிடம் ஏதும் பேச வந்தால் அதை காது கொடுத்து கேளுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் எவ்வளவு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்தாலும் பரவாயில்லை, அதை அப்படியே நிறுத்தி விட்டு உங்கள் பிள்ளை சொல்வதை கேளுங்கள். அப்போது தான் என் அம்மா எனக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்ற எண்ணம் உங்கள் பிள்ளைக்கு வரும்.

பிரச்சினைகளை பார்த்து பயந்து ஓடாமல் அதை தைரியமாக எதிர்த்து போராடும் தன்னம்பிக்கையை பெண்பிள்ளைகளுக்கு வழங்குங்கள். சமூகத்திற்கு கட்டுப்பட்டு ஒன்றிணைந்து வாழ்வது அவசியம்தான், யார் என்ன சொல்வார்களோ என்று பயந்து பயந்து தவறான முடிவுகளை எடுப்பது பெண்பிள்ளைகளின் இயல்பு. அதை மாற்ற வேண்டும். ஒரு தன்னம்பிக்கையுள்ள ஆளுமைமிக்க பெண்ணால்தான் ஒரு குடும்பத்தை சிறந்த முறையில் உருவாக்க முடியும்.

தொடர்ச்சி...

## நீங்கள் அரசியலில் ஈடுபட....

7. மாற்றுத்திறனாளிகளின் நலன்புரி
8. ஓரினச் சேர்க்கையாளர்கள் சமூகம்
9. உழைப்பின் மதிப்பு
10. ஊடக சுதந்திரமும் ஜனநாயகமும்

சட்டத்தை மதிக்கின்ற இலங்கை:
1. இலஞ்சமும் ஊழலும்
2. போதைப் பொருள்கள்
3. குற்றச்செயல்கள்

இலங்கை அரசைக் கட்டியெழுப்பு வதற்கான பொறுப்புவாய்ந்த கடமையை மேற்கொள்வதற்கு அதிகாரத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கு வெவ்வேறாகவோ ஒன்றிணைந்தோ மேற்கொள்ள முடியாது என்பதையும் அவர்களுக்கு அதற்காக ஆற்றலோ ஆர்வமோ இல்லை பிரச்சினைகளை வைத்தே முதலாளித்துவ அரசுகள் அரசியல் நடத்துகின்றன என்பதையும் நாம் நம்புகின்றோம்.

அச் சம்பிரதாய அதிகாரப் பாசறைகளால் கட்டியெழுப்பியுள்ள அழிவுகளின் மத்தியில் புதியதோர் அரசியல் பாதையினையும், முன்னேறிய அறிவுத்திறன் படைத்த மற்றும் ஒழுக்கநெறி சார்ந்த தலைமையின் வழிகாட்டலின் அடிப்படையில் விரிவான மக்கள் சக்தியொன்றை கட்டியெழுப்ப வேண்டிய சவால் எம் எதிரே உள்ளது.

நிலச் சுவர்ந்தர்களின் அரசர்களும் ஜனநாயகம் என்ற போர்வையில் கிரேக்கத்தில் நடத்திய அரசை விமர்சித்து மக்கள் முன் ஆட்சியாளர்களை அறிவீர்களாக என காட்டிய பிளேட்டோ பின்வரும் தத்துவத்தை மக்களுக்கு வழங்கினார் 'நீங்கள் அரசியலில் ஈடுபட மறுப்பதற்குத் தண்டனையாகவே நீங்கள் உங்களை விடத் தாழ்ந்தவர்களால் ஆளப்படுகின்றீர்கள்'.

நல்ல சமூகம் ஒன்றினை நாம் உருவாக்க வேண்டும். அதற்காக பண பலத்துக்கும் அதிகார பலத்திற்கும் எதிராக நாம் போராட வேண்டும். அதேபோல் மக்களின் பொருளாதாரத்தை பாதுகாக்க சமூகத்தையும், கலாசாரத்தை பாதுகாக்க மக்களின் நேரடி தலையீடும் அவசியம். சகல மக்களும் பொருளாதார ரீதியில், கலாசார ரீதியில் தீர்மானம் எடுக்க உரிமை உண்டு. இதில் ஒரு சமூகம் மட்டுமே தீர்மானிக்க முடியாது. அதேபோல் சர்வதேச தரப்பிடம் இலங்கையை மீண்டும் அடையாளப்படுத்த வேண்டும்.

இன்று தேசிய பாதுகாப்பு குறித்து பலரின் குரல் எழுப்பப்பட்டுள்ளது. கடல் எல்லையில் ஆயுதக்கப்பல் நிறுத்துவதே இன்று தேசிய பாதுகாப்பு என கூச்சலிட்டு வருகின்றனர். ஆனால் தேசிய பாதுகாப்பு என்பது நாட்டின் உணவுப் போசாக்காகும். அதனைக் கருத்தில் கொள்ளாது வேறு எதுவும் தேசிய பாதுகாப்பாக அமையாது. ஆகவே இலங்கையில் மக்களுக்கு போசாக்கு மிக்க உணவுகளை வழங்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். காலத்தின் தவறுகளில் இருந்து நாட்டினை மீட்டெடுக்க மக்களுக்கு நல்லதொரு வாய்ப்பு கிடைத்துள்ளது அதனை சரியாக பயன்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

AGNI PULAYAVELY INDUSTRIES

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு

## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் 120ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

**(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)**

